

புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது.

௨

விரோதி௵(1889)ஆவணிமீ ௨௰௨ ஆரம்பமானது

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்	இலங்கை இந்தியா	[illegible]
ரூபா-5 00	ரூபா.8 00	ரூபா.9 00
இங்கிலிசும் தமிழும்-9 00	இங்கிலிசும் தமிழும்.12 00	இங்கிலிசும் தமிழும்-13 00

இந்துசாதனம்

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு - ஒருகலம் ரூபா 10-00.
" அரைக்கலம் ரூபா 5-50.
" கால்க்கலம் ரூபா 4-00.
[illegible]

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச் செம்பூத்த நிகமாக மங்க ளோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்,
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது மதம்பூத்த விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்."

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—௪௫ } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுக௵ கார்த்திகைமீ ௨௰௫; (1933 டிசம்பர் 11) திங்கட்கிழமை. { இலக்கம்—௯௮

கந்தரலங்காரம்.

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே.

இ—ள்: முன்னம் குறிச்சியில் சென்று - முற்காலத்திலே குறிஞ்சி நிலத்துள்ள சிற்றூருக்குச் சென்றருளி; கோடுகுழல் சின்னம் குறிக்க - கொம்பு குழல் காகசின்னம் முதலிய வாத்தியங்கள் ஊதப்பட; குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை - குறிஞ்சிநிலத்திற்குரியவர்களாகிய வேட்டுவர்களின் அபிமான புத்திரியாயுள்ள வள்ளிநாயகியை; கல்யாணம் முயன்றவனே - திருமணஞ் செய்தவரே; நீ - தேவரீர்; கின்னம் குறித்து - அடியேன் பட்ட துயரத்தைத் திருவுளத்துக்கொண்டு; அன்று அடியேன் செவிகேட்கச் சொன்ன குன்னம் - அத்துயரத்தை நீக்கும்படி அந்தகோசத்தில் தமியேனுடைய செவியிற்படும்வண்ணம் உபதேசித்தருளிய இரகசியம்; குறிச்சிவெளியாக்கிவிட்டது - இக்குறிஞ்சி நிலத்திலே தன்னை வெளிப்படுத்திவிட்டது எ—று.

கின்னம், கிசம் (வடசொல்) - வேதனை என்பது பொருள். குன்னம் இரகசியம் என்பது உலக வழக்கு; இங்கே ஞானோபதேசம். தேவரீர் அன்று அடியேற்குச்செய்த மெஞ்ஞானோபதேசமானது தன்னையடையப்பெற்ற தமியேன் இந்நாட்டிற் பிரவேசித்தமாத்திரத்தே என்னை காட்டினார் மெஞ்ஞானியென்று சொல்லும்படி செய்துவிட்டதென்பது போதாசுவாமிகள், "குன்னங்குறிச்சி வெளியாக்கிவிட்டது" எனக் குறிச்சியின் செயலாக அதன்மேல் ஏற்றக் கூறியருளினர். இனி ஞானோபதேசம் பெற்றோர்க்கு எல்லாஞ் சிவமயமேயாக, பிரபஞ்சம் புலப்படாது வெளியாகக் காணப்படுதலின் குன்னங்குறிச்சி வெளியாக்கிவிட்டதெனக் கூறினரென்பதுமொன்று. மூலமல் இங்ஙே செப்புது முடிந்தன. மேலும் அருணகிரிநாதசுவாமிகளின் சரித்திரத்தோடு ஒட்டி நோக்குமிடத்து கின்னம் என்றது அவரை, திருவருணைக் கோபுரத்திலிருந்து வீழ்ந்து தற்கொலைசெய்யத் தூண்டிவிட்ட துன்பத்தையும், குன்னம் என்பது, அங்ஙனம் விழும்போது சிவகுருநாதன் திருவுருவாய் ஆங்கு வெளிப்பட்டு அவர் நிலனுறுமுன்னர் தமது திருக்கரத்தாற் றாங்கித் தடுத்து ஆட்கொண்ட சமையத்திற் செய்தருளிய ஞானோபதேசத்தையும் முறையே குறிப்பனவாம். இஃது குகப்பெருமான் உபதேசத்தினால் தாம் அடைந்த உண்மைநிலையைச் சுவாமிகள் வெளியிட்டவாறும்.

என் குருநாதா, தேவரீர் முன்னர் அடியேன் துயர்தீர்த்து ஞானோபதேசஞ் செய்து அடியேனைத் தடுத்தாட் கொண்டருளிய திருவருட்டிறம் இந்நாட்டில் வந்தமாத்திரத்தே வெளிப்பட்டதென்றபடி. ௨௪.

ஸ்ரீமுக௵ மார்கழிமாச நக்ஷத்திர ராசிப்பலன்.

[பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் வாக்கிய பஞ்சாங்கத்திற் கண்டபடி.]

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்களிற்பிறந்தவர்களுக்கு.

மாதாவழிக் கவலை, பகைமிகுதி, பிதாவுக்கு அற்பபீடை பிரயாசததாலிலாபம்.

கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

சகோதரர் கவலை, சரீரமெலிவு, காரியத்தாமதம், அதிகசெலவு.

மிருகசீரிடப் பின்னரை திருவாதிரை புனர்பூச முன் முக்ககால்களிற் பிறந்தவர்களுக்கு:

வாக்குக் கலகம், அக்கினி ஆயுதபயம், இடமாற்றம், பொருட்செலவு.

புனர் பூசத்து நாலாங்கால் பூசம் ஆயிலியங்களிற் பிறந்தவர்களுக்கு:

காரியானுகூலம், தாரபீடை, களத்திர வழிப்பாற் செலவு, சகோதர நன்மை.

மகம் பூரம் உத்தர முதற்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

பொருள்வரவு, குடும்பசுகம், மித்திரர் உதவி, வஸ்திராபரணலாபம்.

உத்தரப் பின்முக்கால் அத்தம் சித்திரை முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

வஞ்சகராற் தீங்கு, அற்பலாபம், தொழில்மாற்றம்.

சித்திரைப் பின்னரை சோதி விசாகத்து முன்முக்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

இனத்தவரால் தூற்றப்படுதல், காற்கால் மிருகநஷ்டம், வரவு குறைவு, துன்பம்.

விசாகத்து நாலாங்கால் அனுடம் கேட்டைகளிற் பிறந்தவர்களுக்கு:

இனசன மகிழ்ச்சி, புதிய சிநேகம், நன்குமதிப்பு, கடின வார்த்தை, சுகம்.

மூலம், பூராடம், உத்திராட முதற்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

சிரரோகம், சரீர இளைப்பு, நிலைக்குழப்பம் தெய்வவழிபாட்டாற் சுகம்.

மார்கழிமாச விசேஷ தினங்கள்.

உக. (16-12-33) சனி, அமாவாசை விரதம்
சஉ (18-12-33) திங்கள், சாக்கியநாயனார் குருபூசை
கூஉ. (21-12 33) வியாழன், சுபமுக சம்மாரம்
எஉ. (22-12 33) வெள்ளி, விநாயகர்சஷ்டி விரதம் உதயத்தின்முன் திருவெம்பாவைப் பூசையாரம்பம், சிதம்பரம் உற்சவாரம்பம், திருக்கோணமலை விசாலாட்சி பகற்பத்து உற்சவாரம்பம்
ககஉ. (25 12-33) திங்கள், வாயிலார் நாயனார் குருபூசை
கஉஉ 27-12 33) புதன், வைகுண்ட ஏகாதசி
கசஉ (28-12-33) வியாழன், கார்த்திகை விரதம் கர்ப்போட்ட ஆரம்பம்
கருஉ (29 12 33) பிரதோஷவிரதம்
கஎஉ. (31-12-33) பூரணைவிரம் சிதம்பரம் நடேசோற்சவம், கடையநாயனார் குருபூசை
கஅஉ. (1-1-34) உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம் (மார்கழித் திருமஞ்சனம்) 1934-ம் ஆண்டுப் பிறப்பு
உசஉ (7-1-34) ஞாயிறு இயற்பகை நாயனார் குருபூசை
உஎஉ (10-1-34) புதன், மானக்கஞ்சாற நாயனார், குருபூசை கர்ப்போட்ட நிவிர்த்தி
ஙoஉ. (13-1 34) சனி, பிரதோஷவிரதம், அன்றிரவு 11 மணி, 34 நிமிஷம் வரையில் தைமாதப் பிறப்பு.

உத்தராடப் பின்முக்கால் திருவோணம் அவிட்டத்து, முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

விஷசீவிகளாற் பீடை, அதிக கஷ்டம், வரவின்மிகுத்த செலவு, தாரமெலிமெலிவு.

அவிட்டத்துப் பின்னரை சதயம் பூரட்டாதி முன்முக்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

ஜலதோஷம், சோர பயம், பொருட் கஷ்டம் சத்துருக்களாற் கவலை.

பூரட்டாதி நாலாங்கால் உத்தரட்டாதி, ரேவதிகளிற் பிறந்தவர்களுக்கு:

குடும்பச் சிறப்பு, பந்துக்களாற் கவலை, தாரசுகம், தற்பிரயாணம், பொருள்வைபவம், லாபம்.

புங்குடுதீவுக் கொலைவழக்கு.

மதத்துவேஷ நாடகத்தால் வந்த பயன்?

"பிராமணனை" உதைப்பதேன்?

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் டிஸ்திறிக்நீதிபதி ஸ்ரீ சி. குமாரசுவாமி அவர்கள் முன்னிலையில் (1) நாகிங்கர் சங்கரப்பிள்ளை (2) எம அப்பாக்குட்டி (3) என். சின்னத்தம்பி (4) என். கணபதிப்பிள்ளை (5) என். நாகலிங்கம் (6) ஆர். குழந்தை அல்லது இ. சுந்தரம் பிள்ளை (7) —— (8) என். வேலுப்பிள்ளை (9) வி. சரவணமுத்து அல்லது சரவணை (10) என். அம்பலவாணர் (11) கி நாகமுத்து (12) சின்னையா கதிரவேலு அல்லது சின்னத்தம்பி கதிரவேலு (13) கே. கோவிலன் அல்லது சின்னத்தம்பி அப்பாக்குட்டி நாகநாதர் (14) என் அம்பலவாணர் அல்லது ஆறுமுகம் அம்பலவாணர் (15) என். தம்பையா (16) என். சிற்றம்பலம் (17) காத்திமுத்தன் அல்லது முத்துத்தம்பி (18) கே. இராமநாதர் (19) என். சுப்பர் (20) கே சின்னத்தம்பி (21) ஏ நாகலிங்கம் (22)— (23) ஏ கந்தையா அல்லது விசுவலிங்கம் (24) பி. கந்தையன் அல்லது பி குலசேகரம்பிள்ளை (25) கே. கதிரவேலு (26) கறுவல்தம்பி அல்லது என். தர்மலிங்கம் (27)— (28)— (29) வை வேலாயுதர் (30) ஏ. சின்னையா (31)— (32)— (33) சின்னையா அல்லது சின்னத்தம்பி அம்பலவாணர் அல்லது அருணாசலம் அம்பலவாணர் (34) ஐயன் சுந்தரம்பிள்ளை (35) ஐயன் செல்லத்தம்பி (36) கே. இராமு அல்லது எஸ் இராமநாதன் (37) ஐ. சின்னத்துரை (38) எஸ். வீரகத்தி (39) எஸ் ஏரம்பு (40)— (41) எம். வைத்தியலிங்கம் (42) எஸ் ஐயாத்துரை (43) சே. சவரிமுத்து அல்லது ஏ. சவரிமுத்து அல்லது முத்துவேலு (44) கே காசிப்பிள்ளை (45) கே இலகுப்பிள்ளை (46) எஸ். சுப்பையா (47) ஏ செல்லையா (48) கே கதிர்காமர் (49) பி. பொன்னையா (50) வைரவன் கணபதிப்பிள்ளை (51) சின்னத்தங்கச்சி கந்தையா (52) அருணாசலம் கந்தையா (53) சின்னத்தம்பி கதிரவேலு (54) நாகலிங்கம் பொன்னம்பலம் முதலியவர்களுக்கு எதிராக (1) சென்ற 1934ஆ மேமீ" 21-ந் திகதியளவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊர்காவற்றுறைப் பகுதியில் புங்குடுதீவு என்னுமிடத்தில் அபாயம் விளைக்கக்கூடிய பொல்லு, கல்லு, கத்திகளுடன் சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி துராக்கிரமமாக நடந்தார்களென்றும் (2) அபாயம் விளைக்கக்கூடிய பொல்லு, கத்தி, கல்லு முதலியவைகளுடன் சட்டவிரோதமாகக் கூட்டங்கூடிக் கலகம்விளைத்து பறையவகுப்பைச் சேர்ந்தவர்களுக்குக் காயம் விளைவித்ததாகவும் (3) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி மரியான் ஜூசை என்பவனுக்குப் பாரதூரமான காயம் வருவித்ததாகவும் (4) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி வஸ்தி சவரி என்பவனுக்குக் காயம் வருவித்ததாகவும் (5) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி மரியான் மனுவல் என்பவனுக்குக் காயம் வருவித்ததாகவும் (6) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி குருசு மிக்கேல் என்பவனுக்குக் காயம் வருவித்ததாகவும் (7) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி சவரி மரியான் என்பவனுக்குக் காயம் வருவித்ததாகவும் (8) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி கபிரியேல் பிலுப்பு என்பவனுக்குக் காயம் வருவித்ததாகவும் (9) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி ஆனுசி என்பவளுக்குக் காயம் வருவித்ததாகவும் (10) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி பிரான்சிஸ் கட்சத்திரம் என்பவனுக்குக் காயம்வருவித்ததாகவும் (11) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி வீட்டிற்குத் தீ வைத்ததாகவும் (12) சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி மரியான ஜூசை என்பவனுக்குப் பாரதூரமாகிய காயம் வருவித்ததாகவும், (13) வஸ்தி சவரி யென்பவனுக்குக் காயம் வருவித்ததாகவும், (14) மரியான் மனுவல் என்பவனுக்குக் காயம் வருவித்ததாகவும், (15) குருசு மிக்கேல் என்பவனுக்குக் கத்தியாற் குற்றிக் காயம் வருவித்ததாகவும், (15) குருசு மிக்கேல் என்பவனுக்குக் கத்தியாற் குற்றிக் காயம்வருத்ததாகவும், (16) சவரி மரியான் என்பவனுக்குக் காயம் வருவித்ததாகவும், (17) கபிரியேல் பிலிப்பு என்பவனுக்கு ஆயுதத்தினால் காயம் வருவித்ததாகவும், (18) ஆனுசி என்பவளுக்கு ஆயுதத்தினாற் காயம் வருவித்ததாகவும், (19) பிரான்சிஸ் கட்சத்திரம் என்பவனுக்கு ஆயுதத்தினால் காயம் வருவித்ததாகவும், (20) வீட்டைத் திக்கிரையாக்கியதுமல்லாமல் அக்நெருப்பில் பிரான்சிஸ் கட்சத்திரத்தைத் தூக்கிப் போட்டதாகவும் முதலிய இருபதுவகைக் குற்றங்கள் பாரித்துத் தொடரப்பட்ட வழக்கு சென்ற வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரளான ஜனங்கள் இவ்வழக்கைப் பற்றி அறியும்வண்ணம் நீதிஸ்தலத்தைச் சுற்றிக் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வழக்கிற்கெனக் கொழும்பிலிருந்து வந்த முடிக்குரிய நியாயவாதி மிஸ்ரர்: E. H. D. குணசேகரரவும், நியாயதுரந்தரர்: N. ஜேம்ஸன், மிஸ்ரர்: V. சுவாம்பிள்ளை முதலியோரும் வழக்கை நடத்தினர், எதிரிகளுக்காக கொழும்பு நியாயவாதி மிஸ்ரர்: ஏமியன் பெரிரா, மிஸ்ரர்: ஜூலியஸ் பிலிப்ஸ், ஸ்ரீ K. சண்முகம் முதலியோரும், நியாயதுரந்தரர் மிஸ்ரர்: S A. சபாபதி, ஸ்ரீ K. V. இராசையாவும் ஏற்பட்டனர்

முடிக்குரிய நியாயவாதி வழக்கின் சாரத்தைக் கூறிமுடித்ததன்பின்பு முதலாவதாக டாக்டர்: எல். டி பேரல் (ஊர்காவற்றுறை) அவர்கள் சாட்சியஞ்சொன்னார் இரண்டாவதாக மரியான் மனுவல் கொடுத்த சாட்சியம் பின்வருமாறு:-

"எனது வயது 29 நான் கமத்தொழில் செய்பவன். எனது தகப்பன்தான் சவரி மரியான் என்பவர். நான் வலங்கமான் வகுப்பைச் சேர்ந்தவன். வேளாள வகுப்பினர் எங்கள் வகுப்பினரைப் பறையர் எனச் சொல்வதுமுண்டு நான் றோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவன். மேமாசம் 20-ந் திகதியன்று நடைபெற்ற சம்பவம் முழுதும் நினைவிலிருக்கின்றது. அன்று எமக்குப் பெருநாட்கொண்டாட்டமானமையால் எங்கள்கோவிலில் ஓர் நாடகம் நடைபெறவிருந்தது. அதனாலே நான் அன்றுபின்னேரம் 5½மணியளவில் கோவிலுக்குப் போனேன். அங்கு எமது ஆட்கள் ஏராளமாக விருந்தார்கள். பின்னர் அன்றிரவு நாடகம் நடைபெறவில்லை. அத்தருணத்தில், அதாவது நான் புறப்படவிருந்த சமயத்தில் வேளாளஜாதியாட்கள் கூட்டங்கூடிக் கத்தி பொல்லுடன் நின்றபடியால் பயந்து புறப்படவில்லை. ஞாயிற்றுக்கிழமையன்றும் ஆராதனை தொடங்குமுன் வெளியிற் ஜனங்கள் கூடி நின்றார்களெனக் கேள்விப்பட்டேன்.

(தொடர்ச்சி 3-ம் பக்கத்தில்.)

கொழும்பு விவேகானந்த சபை வித்தியாலயத்திற்கு ஆசிரியரும் ஆசிரியைகளும் தேவை.

பதிவு செய்யப் பெற்ற உதவி ஆசிரியர் ஒருவரும் ஆசிரியைகள் இருவருமாக மூவர் தேவை விண்ணப்பம் அனுப்புவோர் தங்கள் தராதரப் பத்திரங்களின் இணைப் பிரதிகளுடன் 25-12-33க்கு முன் அறிவிக்கவேண்டும்

Local Manager,
Vivekananda Vidyalayam,
(Mis 166. (11&14 12-33)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகஹு
கார்த்திகைமீ உகூஉ திங்கட்கிழமை.

சுருட்டுத் தொழிலுக்கு வந்த கேடு.

1

ஒருகாலத்திலே யாழ்ப்பாணமக்களுக்குப் பெரும் வருவாய்க்கும் முயற்சிக்கும் ஏதுவாயிருந்த புகையிலைச்செய்கையும் சுருட்டுத் தொழிலும் வியாபாரமும், இப்பொழுது உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயவாறு, பெரிதுங் குன்றத் தலைப்பட்டுக்கொண்டன. மேலே சொல்லப்பட்ட முயற்சிகளைச் செய்த வருட் பல்லாயிரக்கணக்கானோர் இப்பொழுது தொழின்முயற்சியின்றிச் செய்வதின்னதென்று அறியாராய் மடிமையோடும் மிடிமையோடும் தெருவழியே திரிகின்றார்கள். இவர்களுட் பலர் செய்ய முயற்சியில்லாமையினாற்போலும் தீய கருமங்களிலும் பிரவேசித்துத் தமக்கும் பிறர்க்கும் இடரை விளைக்கின்றார்கள். தொழின்முயற்சியற்ற இக்காலத்திலே இந்தச் சுருட்டுத்தொழிலொன்றைமாத்திரம் பழைய உந்நத நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டால் இங்குள்ள பணமுட்டு நீங்குமென்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். இந்தவிஷயமாக ஏதும் முயற்சியின்றி இன்னமும் வாளாவிருந்தால் காலகதியில் இச்சுருட்டுத்தொழிலும் புகையிலைச் செய்கையும் இங்கே முற்றாக இல்லாதொழியுமென்றே சொல்லலாகும்.

முன்னர்ப் பிரதான வருவாயாகவுந் தொழிலாகவு மிருந்த சுருட்டுத்தொழில் காலந்தோறும் குன்றிக் குன்றி இப்பொழுதுள்ள க்ஷீணதசையை அடைந்தமைக்குக் காரணங்கள் பல. அந்நியநாட்டி லிருந்து வரும் சிகறற் பீடி யென்னுமிவைகள் மலிந்தமை ஒரு காரணம்; இலங்கையிலே ஆக்கப்பட்டுச் செலவாகும் மலிந்த சிகறற் இன்னொரு காரணம். இவைகளைக்காட்டிலும் பிரதானமான வேறொரு ஏது என்னவெனில், யாழ்ப்பாணத்தவர்களா யுள்ளாருட் சுருட்டுப் பிடிப்போரும் தம் நாட்டிற் செய்யப்படும் சுருட்டைப் புறக்கணித்து பீடி சிகறற் என்னு மிவைகளை வரைவின்றி வாங்கி உபயோகிக்கத் தலைப்பட்டமையேயாம். புகையிலைத்தோட்டஞ் செய்வோர், சுருட்டு முதலாளிமார், அவர்களுடைய பிள்ளைகள், சுற்றத்தவர் ஆகிய இவர்களெல்லாரும் தாம் ஆக்கும் ஆக்குவிக்கும் சுருட்டுக்கள் கிடக்க அவற்றை விடுத்து, பீடி சிகறற் என்னு மிவைகளைத் தேடித் தேடி வாங்கி வாங்கி உபயோகிக்கக் காணப்படுகிறார்கள். சுருட்டை வாயிற் கௌவிக்கொண்டு புறப்படுவதைக்காட்டிலும் பீடியை, சிகறற்றை கௌவிக்கொண்டு வெளியே புறப்பட்டுச் செல்வது கௌரவமென்ற விபரீதமான எண்ணமும் இங்குள்ளார் பலருடைய தலையுட் புகுந்துகொண்டது. இவர்கள் செயல் தாம் சாவ மருந்து குடித்தல்போலாகுமென்பதை இவர்கள் இனிமேனுஞ் சிந்திக்க வொண்ணுதா?

மேலும் சுருட்டுத்தொழிலுக்கு முற்றுய் அழிவு தேடியவர்கள் வேறு எவருமல்லர், இங்கே சுருட்டு முதலாளிமாரென்று இருப்போரேயாம். இவர்கள் பரஸ்பரம் இந்த வியாபார விஷயத்தில் எதிர்காட்டி ஒவ்வொருவரும் மற்றவரைக்காட்டிலும் மலிவாகச் சுருட்டை விற்கவேண்டுமெனத் தொடங்கினர்கள், இப்படித் தொடங்கி, சுருட்டின் குணத்தைக் கெடுத்துவிட, வாங்கி உபயோகிப்போர் பேர்பெற்ற யாழ்ப்பாணச் சுருட்டு தன் தொன்மை மகத்துவமிழந்து சுவையற்று அருமையற்றுக் கெட்டமையைக் கண்டு அதனை விடுத்து பீடி சிகறற் என்னு மிவைகளை வாங்கி உபயோகிக்கத் தலைப்பட்டனர். பிறிதொரு காரணம் சுருட்டுத்தொழில்செய்பவர்கள், காலத்திற்குக் காலம் வேலைநிறுத்தஞ் செய்து தங்கள் நாட்கூலியை ஏற்றி ஏற்றி வந்தமையாகும். உணவுப்பொருள்கள் சிலதுணிகள் நூற்றுக்கு ஐம்பது விகிதம் குறைந்துள்ள இக்காலத்திலும், முன் உயர்த்தப்பட்ட கூலியையே முதலாளிகள் தரவேண்டுமெனப் பிடிவாதஞ் செய்தலேயாம். இப்பிடிவாதத்தினுல் இவர்களுள் எண்ணிறந்தோர் இப்பொழுது தெருவழியே வேலையற்றுத் திரிகிறார்களே! இது புத்தியாகுமா? இதனுல் சுருட்டு வியாபாரமும் புகையிலை வியாபாரமும் புகையிலைச் செய்கையும் தேய்ந்து வரலாயின. இந்தப் பிரதான முயற்சிகள் குன்றினமையினுல் யாழ்ப்பாணத்தவர்க்குமாத்திரமன்று, கண்டிப்பகுதி மட்டக்களப்புப் பகுதி முதலிய ஊர்களிலுள்ள புகையிலைச் செய்கைக்காரருக்கும் நஷ்டம் நேர்ந்துளது. அந்தப் பகுதிகளிலுள்ள புகையிலைகளே இங்கே பெரும்பான்மை காப்பிலைக்கும் சிறுபான்மை உள்ளிலைக்கும் உபயோகிக்கப்பட்டுவருவன.

அல்லாமலும், இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களுள் இன்னொன்று என்னவெனின் இப்படிப்பட்ட முயற்சிகளில் அரசினர் எவ்வகையான சகாயமுஞ் செய்யாது பராமுகமா யிருத்தலேயாம். சிலநாட்களின் முன்னர்க் கூடிய அரசாங்கசபைக் கூட்டத்தில் சவர்க்காரம், லெட்டென்ஸில், தேயிலைப்பெட்டி, விஸ்கோத்து முதலியவைகளைத் திறமாய் ஆக்குதற்கான முறைகளைப்பற்றிச் சொல்லத்தக்க ஒரு நிபுணரை நியமிப்பதற்கு வேதனம் வருஷமொன்றுக்கு 8400 ரூபா அநுமதிசெய்யப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் நாம் பொறாமை கொள்ளவில்லை; அந்நியநாட்டுப் பொருள்களைப் புறக்கணித்து இலங்கையிற்றனே இப்பொருள்களை ஆக்குவதனுல் வரக்கூடிய நன்மைகளை எவரும் அறிவர். ஆனுல் இந்த செய்யப்பட்டுக் காலகதியில் க்ஷீணதசை யடைந்துவரும் சுருட்டுத்தொழில்போன்ற முயற்சிகளைப் பழையபடி நன்னிலைப்படுத்துவதற்கு அரசினர் இப்படி உதவிசெய்யின் அவ்வரசினருக்குஞ் சனங்களுக்கும் பெரும் நன்மையுண்டாகுமல்லவா?

இவைமாத்திரமன்றி இங்கே முன்னர்ச் சனத்தலைவர்களென் றிருந்தவர்கள் இப்படியான புகையிலைவியாபாரம் சுருட்டுவியாபாரம் இவைகளில் அக்காலத்திற் கண்ணுங் கருத்துமா யிருந்து இவைகட்கு ஏதும் இடையூறு வரும்போது உடனுக்குடன் முயற்சிகளைச் செய்து, பத்திரிகைகளில் எழுதவேண்டியவைகளை எழுதியும், கூட்டங்கள் கூட்டிப் பேசியும், காணவேண்டியவர்களைக் கண்டும் முயற்சிசெய்துவந்தார்கள். இக்காலத்திலே இங்கே சனத்தலைவர்களென்று யாருமிருந்தால் அவர்கள் தம்முள் இரண்டுபட்டு அரசாங்கசபையிற் போய்ச் சேர்வதோ, விடுவதோ, மதுபானத்தை மரவரி மூலமாக விருத்திபண்ணுவதோ, இல்லையேல் தவணைமூலமாகவிருத்தி பண்ணுவதோ என்ற இப்படியான விஷயங்களில் விவாதஞ் செய்து இடர்ப்படுகின்றார்களேயொழியப் பொருளாதாரமான விஷயங்களையிட்டு இவர்கள் சிந்திப்பதுமில்லை, முயற்சி செய்வதுமில்லையாம்.

இப்படி எவையும் பிரதிகூலமாக இருக்குமேயானுல் இந்தப் பிரதான முயற்சி தொன்மைநிலை பெறுவதும் இங்குள்ளார் ஈடேறுவதும் எப்படி?

குறிப்புக்கள்.

—(*)—

இது நீதியல்லவே!

இலங்கைச் சுப்பிறீம்கோட்டு நீதிபதிகளை நியமிக்கும் விஷயமாக, இப்போது பலர் மனத்திலும் அதிருப்தி தோன்றியிருக்கின்ற தற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இற்றைக்குச் சின்னுட்களுக்கு முன், சுப்பிறீம்கோட்டு நீதிபதிகள் எழுவரில் ஐவர் ஒரேவகுப்பைச் சேர்ந்தவராயிருந்தனர் என்றும், அப்படி ஒரே வகுப்பினருக்கு மாத்திரம் இது விஷயத்தில் விசேஷ சகாயம் காட்டுவது கீழ்மையாகும் என்றும் எப்போது தருணம் வாய்க்கும் என இருக்கும் வகுப்புவாதிகள் கதறுகின்றனர். நாம் இது விஷயத்திற் கூறக்கூடியது யாதெனில், நீதிபதிகள் எவ்வகுப்பைச் சேர்ந்தவராயினும், அவர்களிடம் உரிய இலக்கணங்கள் அமைந்திருக்குமாயின், அவர்களையே நியமிக்கவேண்டும் என்பதே. ஆனுல், அந்த இலக்கணங்கள், ஒரே வகுப்பினருக்குத்தான் உரியனவா? தமிழர், சிங்களர், முஸ்லீம்கள் முதலிய வகுப்பினருள், நீதிபதிகட்குரிய கல்வி, நீதி முதலியன அமைந்திருக்கவில்லையா? இப்போது நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ள ஒரே வகுப்புப் பிரபுக்களிலும் பார்க்க அறிவாலும் ஆற்றலாலும் மேம்பட்டவர்கள் மற்றைய சமூகத்தினரிடை இல்லையா? இவையே நாம் கேட்கும் கேள்விகள். அரசினர் இவற்றைப்பற்றிச் சிந்தித்து ஏற்றன செய்வாரா?

மைசூரின் முன்மாதிரி.

மைசூர் சமஸ்தானத்தில் உள்ள வித்தியா சாலைகளில், இதிகாசம், பூகோள சாஸ்திரம், அக்ஷர கணிதம், பீஜ கணிதம் முதலாம் பாடங்கள் இதுகாறும் ஆங்கிலப் பாஷை மூலமாகவே கற்பிக்கப்பட்டு வந்தன. ஆனுல், இற்றைக்குச் சின்னுட்களுக்குமுன, இதிகாசம், பூமி சாஸ்திரம் என்னும் இருபாடங்களையும, தாய்ப்பாஷையாம கன்னடம் மூலமாகக் கற்பிக்கப்படல் வேண்டும் என மைசூர் வித்தியாதிகாரி உத்தரவிட்டார். கன்னடம் மூலமாக அஷ பாடங்கள் கற்பிக்கப்பட்ட மாணவர்கள, ஆங்கிலம் மூலமாகப் படித்தவர்களிலும் பார்க்க விஷயத்தை இலகுவில் விளங்கி மேன்மேலும் தேர்ச்சியடைந்து வருவதைக்கண்ட வித்தியாதிகாரி, இப்போது, அட்சரகணிதம் முதலாம கணித சாஸ்திரங்களும் கன்னடம் மூலமாகவே கற்பிக்கப்படல் வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்.

மைசூர் அரசினரின் இச்செயல், எவற்றிற்கும ஆங்கில பாஷையே தஞ்சமெனக் கயிக்கிடக்கும் எமமனோர்க் கெல்லாம கண்முன் மாதிரியாய் விளங்கும் என்பதற்கையமின்று. மக்கள் சுவதந்திர உணர்ச்சி கொண்டுள்ள இக்காலத்தில், சுய மரியாதையைக் காப்பாற்ற முனைந்துநிற்கும் இக்காலத்தில், ஓர் அந்நிய பாஷை மூலமாக நம சிறுர்க்குக் கல்வி வளிப்பது எம பலவீனத்தைக்காட்டும அறிகுறியல்லவா? மைசூர் அரசினரின் செயலை நமது வித்தியாதிகாரிகள் சிந்தித்து நடக்கலாகாதோ? லென்ன?

யாழ்ப்பாண நகரசங்கம்.

—:o:—

கூட்டவிபரம்.

சென்ற சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண நகரசங்கத்தின் கூட்டம் ஒன்று கூடியது. தலைவர் ஸ்ரீ R. R. நல்லையா தலைமை வகித்தார்.

7-ம் வட்டாரத்தில் உள்ள சேணிய தெருவை, அரசடிப் பிள்ளையார் கோவில் தெரு என மாற்றவேண்டும் என 7-ம் வட்டார ஜனங்கள் சார்பாக ஸ்ரீ இராமப்பிள்ளை அவர்கள் ஓர் மநுவைச் சமர்ப்பித்தார். அடுத்த கூட்டத்தில் இதுவிஷயம் ஆலோசிக்கப்படும்.

ஸ்ரீ க. ஐயாத்துரை பின்வரும் தீர்மானத்தை எடுத்தாண்டார்.

(அ.) பெரியகடையில் உள்ள மின்சார சக்தி ஸ்தலத்திற்குச் சமீபத்தில மலிவாக முன்மாதிரி மலகூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்துப் பொதுஜனங்கள் கட்டலாம் என்று பத்திரிகைகளின் விளம்பர மூலமாகவோ, கடித மூலமாகவோ அறிவிக்கப் படல் வேண்டும்.

(ஆ.) மலகூடங்களைக் கட்டுவற்கு 2 மாத காலத் தவணை கொடுக்கப்படல் வேண்டும. அதற்குள்ளும் சொந்தக்காரர் மலகூடங்களைக் கட்டாவிட்டால், நகரசங்கம் தனது பொறுப்பில அவற்றைக் கட்டி செலவை மாதந்தோறும் சொந்தக்காரரிடம இருந்து அறவிடல் வேண்டும.

(இ.) மலகூடம் கட்டத் தவறியவர்களுக்கு யாரும வழக்குத் தொடரவேண்டும என்றநோக்கம் இப்போது தவிர்க்கப் படல் வேண்டும.

(ஈ.) தொடரப்பட்ட வழக்குகள தவிர்க்கப் படல்வேண்டும்.

மேற்படி தீர்மானத்தைப்பற்றித் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டார். "இச்சங்கம் இதுவிஷயத்தில் மிகவும் பொறுமையுடன் இருந்திருக்கின்றது. ஒரு வருஷத்தாலும பொறுத்துப் பார்த்தபின்னரே வழக்குத்தொடர முன்வந்தேம."

மேற்படி தீர்மானத்தை ஆதரிப்பார் இல்லாமையால் அது தோல்வியுற்றது.

நாவலர் திருநாட் கொண்டாட்டம்.

யாழ்ப்பாணக் கலாநிலையத்தின் ஆதரவில் சென்ற 8உ வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் ஞாபகதினக் கொண்டாட்டம் நடைபெற்றது. வியாகரண மகாமகோபாத்தியாயர் பிரமஸ்ரீ வை இராமசாமிசர்மா அவர்கள தலைமையில், பண்டிதர் ஸ்ரீ சி.கணபதிப்பிள்ளையவர்கள நாவலர்பெருமானின் தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் நிறைந்த வாழ்க்கையின் சிறப்பையும், அவரியற்றிய தொண்டுகளின் மாண்பையும் குறித்து, எவர் மனதையும் கவரக் கூடிய சிறந்தவோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவரவர்கள நாவலர்பெருமானின திருவுருவம் கலாநிலைத்தின்கண் வைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி, சொற்பொழி வாளருக்கும் ஏனையோர்க்கும் வந்தனஞ்சொல்லி முடித்தனர். கடித.

வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை கொழும்பு விவேகானந்த சபை முதலாமிடங்களிலும் ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களின் குருபூசை செவ்வனே நடத்தப்பட்டதென அறியலானேம்.

புகைரதப்பகுதி.

கிரயங்குறைந்த பிரயாணச் சீட்டுக்கள்.

நத்தார் புதுவருட விடுதலை நாட்களிற் பிரயாணஞ் செய்வோரின் வசதியை உத்தேசித்து இலங்கைப் புகைரதப்பகுதியார், வழக்கம்போல இந்த டிசெம்பர்மீ 19-ந் திகதி தொடக்கம் அடுத்த ஜனவரி மாதம் 3-ந் திகதி முடிய, 1-ம், 2 ம, 3-ம் வகுப்புக்களுக்காகிய மலிந்த பிரயாணச் சீட்டுக்கள ஜனவரி மாதம் 9-ந்திகதி முடியச் செல்லத்தக்கன. எந்தப் புகைரதஸ்தானத்திலிருந்தும் 25 மைலுக்கு உட்பட்ட தானங்கட்கிடையிற் பிரயாணஞ் செய்வோர்க்கு இச்சீட்டுக்கள் இல்லையாம.

இலங்கை-இந்திய புகைரதம்.

இங்கிருந்து தென்னிந்தியாவிலுள்ள சிதம்பரம் முதலிய தலங்கட்குச் செல்லும் யாத்திரிகர்களுடைய வசதிக்காக, இந்த டிசெம்பர்மாதம் 14-ந் திகதி தொடக்கம 31-ந்திகதி வரையிற் கிரயங்குறைந்த பிரயாணச்சீட்டுகள உதவப்படும. இச் சீட்டுக்கள ஜனவரிமீ 15-ந் திகதி முடியும் வரை செல்லும் என அறியலானேம்.

யாழ்ப்பாணச் சிறைக்கூடத்தைத் திருத்த.

யாழ்ப்பாணச் சிறைக்கூடத்தைத்திருத்தி விசாலமாக்குவதற்கு 2425 ரூபா வேண்டுமென உள்நாட்டு மந்திரி, நாளையத்தினம் கூடும் அரசாங்கசபையிற் கேட்பார். இது சம்பந்தமாக உள்நாட்டுமந்திரியின் அறிக்கை வருமாறு:—

"யாழ்ப்பாணச் சிறைக்கூடத்து ஆஸ்பத்திரியின் நிலைமையைப்பற்றி அனேகர் குறைகூறியிருக்கின்றனர். காலஞ்சென்ற தேசாதிபதி சேர் கிறெயிம் தொம்ஸன் அவர்கள், இந்த ஆஸ்பத்திரியில் ஆட்கள் சிகிச்சை பெறப்போதிய இடம் இல்லையென்றும், இப்போது பெண்கள் வசிக்கும் சிறைக்கூடத்தையே ஆஸ்பத்திரியாகப் பாவித்தால் நலம் என்று யோசனை கூறினர். இதுபற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இப்போது, சிறைக்கூட உத்தியோகத்தர் உணவருந்தும்சாலையைப் பெண்கள் சிறைக்கூடமாக்கி, நாவிதன் வசிக்கும் அறையை உத்தியோகத்தர் உணவருந்தும் இடமாக்கவேண்டும். இப்போதுள்ள பெண்கள் சிறைக்கூடத்தை ஆஸ்பத்திரியாக்குவதற்குப் பல மாற்றங்கள் செய்யப்படவேண்டும். அதற்காகவே மேற்படி தொகை தேவை."

சைவசித்தாந்தசபை தூத்துக்குடி.

இச்சபையின் ஐம்பதாம் ஆண்டு நிறைவுப் பொன்விழா, நிகழும் டிசம்பர் 24, 25, 26 ஆம் (மார்கழித் திங்கள் 10, 11, 12 ஆம்) நாட்களில் நடைபெறும். அவ் விழாவின் பேரவைக்கு மகிபாலன்பட்டி திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் தலைமைவகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மேற்படி விழாவை யொட்டி கீழமருதூர் திருவாளர் தி. குசி. நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் சைவஇளைஞர் மகாநாடும், பல்லாவரம் உயர்திரு. மறைமலையடிகளின் மருமகளார் ஸ்ரீமதி மாணிக்கவாசக சரோஜனிதேவியார் தலைமையில் சைவமங்கையர் மகாநாடும் நடைபெறும். விபரமான நிகழ்ச்சிக் குறிப்பு அமைச்சர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என மேற்படி சித்தாந்தசபைக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவுக் கலக வழக்கு

(1-ம்பக்கத் தொடர்ச்சி.)

கடைவைத்திருக்கும் மரியாச்சியை எனக்குத் தெரியும். சனிக்கிழமை விடியற்புறம் விடெரிந்ததையும் கண்டேன். அதன்பின்னரே 6 மணியளவில் கோவிலில் ஆராதனை முடிவுற்றது. கோவிலிலிருந்து எனது தகப்பனார், எனது தாயார், என் சகோதரியாகிய மரிசலேனான், தம்பியாராகிய குருசு, வைத்தி முதலியவர்களுடன் நான் புறப்பட்டு வந்தேன். பொன்னையா கடையைக் கடந்து சிறிதுதூரஞ் சென்றதும் திரளான ஜனங்கள் சேர்ந்து வந்து, "எங்கடா போகிறீர்கள்" எனக் கேட்க, நான் "வீட்டிற்குப் போகிறோ"மெனத் தெரிவிக்க, அவர்கள் "வீட்டிற்கா போகிறீர்கள்" எனச் சொல்லி எனக்கு அடித்தார்கள்; என் தகப்பனாருக்கும், தம்பி குரிசு வைத்திக்கும் அடித்தார்கள். குரிசு எனக்குப்பின்னாக வந்தமையால் அனுக்கு அடி விழ்ந்ததோவென எனக்குத் தெரியாது. எனக்கு முதலில் பொல்லினாலடிக்க நான்கீழே விழுந்துவிட்டேன். அதன்பின்னர் கத்தியால் எனது கழுத்திற் குற்றினார்கள். அத்தருணத்தில் யார் யார் நின்றார்களென எனக்குத் தெரியாது. நான் கீழே கிடந்துவிட்டு எழுந்து கோவிலுக்குப் போனேன். அங்கு எனது தம்பியும் சகோதரியும் நின்றார்கள். அதன்பின்னர் கோவிலிலிருந்து வெளியே போகாதபடி ஞாயிற்றுக்கிழமை முழுதும் திங்கட்கிழமை பின்னேரம் வரையிலும் இருந்தோம். அதன்மேற்றான் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டோம். ஆஸ்பத்திரியில் 14 நாள்வரையும் இருந்தேன். ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் உடையார்வந்து, என்னிடம் வாக்குமூலம் கேட்டதின்மேல் அவ்வூரிலுள்ள ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து கட்டும்படி தெரிவித்தார். எனது தம்பி குருசுவிடமும் அவ்வண்ணமே தெரிவித்தார். எனக்கு அடித்தவர்கள் யாரெனத் தெரியாமலிருக்க எனது தம்பி எனக்கு அடித்துக் குற்றியவர்களின் பெயர்களுள் அம்பலவாணர், ஏரம்பு என இருவரின் பெயர்களைச் சொல்லியதனால் நான் உடையாரிடம் அவர்கள் பெயரைச் சொல்லியிருந்தேன். ஆனால் அவர்களை எனக்கு இதுசம்பவம் நடக்குமுன்னர்த் தெரியாது"

சாட்சியை நியாயவாதி எலியன் பெரீரா அவர்கள் குறுக்கு விசாரணை செய்யும்போது சொல்லியவை:-

நியாய:- ஞாயிற்றுக்கிழமையன்று பூசை நடைபெற்றது எந்த நேரத்தில்?— மணிக்கணக்குச் சொல்ல அதிகம்தெரியாது ஐயா, சுமார் 8-30 மணியிருக்கும்.

நியாய:- எந்நேரத்தில் கோவிலில் வழக்கமாகப் பூசை நடப்பதென உனக்குத் தெரியுமா?—தெரியாது.

நியாய:- அன்றையத்தினம் எத்தனைதரம் பூசை நடந்தது?—காலை ஒருதரந்தான், ஆனால் பின்னேரத்தில் ஆசீர்வாதம் நடந்தது

நியாய:- அன்றுகாலை உங்கள் சாதியாட்கள் யாவரும் வருகிறவர்களல்லவா?—ஆம்.

நியாய:- நீ வழமையாகக் கோவிலுக்கு எப்பொழுது போவாய்?—முகங்கழுவியதும் கோவிலுக்குப் போவேன்.

நியாய:- எப்பொழுது நீ முகங்கழுவுவாய்?—நித்திரையாலெழும்பியதும் முகங்கழுவுவேன்.

நியாய:- எப்பொழுது நித்திரையால் எழும்புவாய்?—ஆறரை மணிவரையில் எழும்புவேன்

நியாய:- அன்று கோவிலில் நாடகம் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது அல்லவா?—ஆம்.

நியாய:- அந்த நாடகத்தில் ஓர் பிராமணக் குருக்களைப்பற்றிச் சில சொற்கள் இருந்தன?—ஆம்.

நியாய:- என்ன செய்வதாய் இருந்தது?—மடத்தினுக்கும் (சென்ற் அந்தோனியாரின் மகன்) பிராமணனுக்கும் தத்தம் சமயம் பற்றி விவாதம் நடக்கும்.

நியாய:- அந்த நாடகத்தில் இந்துக்கள் வணங்கும் விக்கிரகமும் வைக்கப்படுமல்லவா?—இல்லை.

நியாய:- அந்நாடகத்தின் முடிவில் மடத்தின் பிராமணனை உதைக்கிறவனல்லவா?—இல்லை.

நியாய:- நீ சாட்சி சொல்லுவது மிகவும் கவனமாகச் சொல்லவேண்டும்; அந்த நாடகம் எழுதியிருந்த கொப்பி (காட்டி) இதோ இருக்கிறது; இனிமேலாவது உண்மையைச் சொல்?—விக்கிரகத்தை நான் காணவில்லை.

நியாய:- இந்நாடகத்தின் கதை உனக்குத் தெரியுமா?—கொஞ்சம் கொஞ்சம் தெரியும்; அதிகம் தெரியாது.

நியாய:- இந்நாடகத்தில் பிள்ளையார் வரும் பகுதியை விட மற்றப்பகுதி உனது நினைவிலிருக்குது; பிள்ளையாரை மறந்துவிட்டாய்?—இல்லை.

நியாய:- இந்நாடகத்தை நடத்த வேளாளர் ஆத்திரப்பட்டார்களல்லவா?—ஆம்.

நியாய:- வேளாளர் மறித்திருக்கிறார்களல்லவா?—ஆம்.

நியாய:-மடத்தினுக்கும் பிராமணனுக்கும் நடக்கும் தர்க்கம் முடிவதெப்படி?—மறந்துவிட்டேன்.

நியாய:-நான் சொன்னால் உனக்கு நினைப்பு வருமா? சொல்லுகிறேன் கேள். ஒரு பிராமணக் குருக்கள் பிள்ளையாரின் முன்னின்று சுவாமி தெரிசனம் செய்யும்போது மடத்தின் அவ்விடம் வந்து குருக்களை உதைப்பான். பின்னர் பிராமணனைக் கத்தோலிக்க மதத்தில் சேரச் செய்வதல்லவா?—பதில் இல்லை.

நியாய:-சுமார் ஐந்து ஆறு நூற்றாண்டுகட்கு முன்னர் இவ்விதமே தமது சமயத்தைப் பரப்புவதற்கு—புறசமயத்தவரைத் தம்மதத்திற் சேர்ப்பதற்குச் செய்துவந்த வழியாகும். அதிலும் பிராமணனை உதைப்பதால் அநேகர் வந்து சேர்வார்களல்லவா?-இல்லை.

நியாய:-அந்நாடக புஸ்தகம் இவ்விடமிருக்கென்பதை நினை?-இருக்கின் பார்க்கலாந்தானே.

நியாய:-இப்பொழுது சொன்னமாதிரி பிராமணனை உங்கள் கண்முன் உங்கள் சமயத்தில் சேர்த்தால் சந்தோஷமாக இருக்குமல்லவா? -இருக்கும்.

நியாய:-இலங்கையிலுள்ள கத்தோலிக்கர்கள் மறுசமயத்தவர்களை நிர்த்தாட்சணியமாக நடத்துவதுதானே. அதுநிற்க நீ கோவிலில் நடைபெறும் பூசையொன்றிற்கும் போகாது விட்டால் இறக்கத்துணிவாயோ?-இல்லை.

நியாய:-உங்கள் வேதத்தில் கோயிலுக்குப் போவது அவசியமெனக் கட்டுப்பாடு இருக்கிறதல்லவா?-ஆம்.

நியாய:-உங்கள் கோயிலுக்கு மறுசமயத்தவன் வந்தால் ஆத்திரம் வருமல்லவா?-ஆம்.

நியாய:-நாடகத்தை நிறுத்தியதால் உனக்கு ஆத்திரம் அதிகம்?-ஆம்.

நியாய:- நீ ஓர் நாடக நடிகனா?-இல்லை.

நியாய:-குருவானவர் பிராமணன் வரும் பகுதியை நிறுத்தியிருந்ததை இன்றைவரையில் தெரியுமா?-தெரியாது.

நியாய:-நீ சாட்சிக்கூட்டில் ஏறும்போது பைபிளை முத்தமிட்டது ஞாபகத்தில் இருக்கும் இவ்விடத்தில் பொய்சொல்லிவிட்டுச் சுவாமிக்குப்போய்ச் சொன்னால் உனது பாவம் மன்னிக்கப்படுமா? நீ மிகவும் கெட்டித்தனம் காட்டுகிறாய்; நிற்க, கோயிலிற் பூசை முடிந்ததின்மேல் நீ போகும்பொழுது அடிபிடி நடந்ததல்லவா?-ஆம்.

இரண்டாம் நாள் விசாரணை.

சென்ற வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் மேற்படி கலகவழக்கு மீண்டும் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. திரும்பவும் மரியான் மனுவல் என்னும் சாட்சியை நியாயவாதி ஏலியன் பெரைரா அவர்கள் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்:

நியாய:- முதலிற் பொல்லடி வீழ்ந்தது அதன்பின் கத்தியாற் குத்தப்பட்டாய்?—ஆம்.

நியாய:- உடனே கீழே வீழ்ந்துவிட்டாய்?—ஆம் ஒரு அடி விழுந்ததுதான் தெரியும். அதன்மேல் எனக்கு மயக்கம் வந்துவிட்டது.

நியாய:- எத்தனைபேர் அடித்தார்கள்?—ஒருவர்தான் அடித்தார்.

நியாய:- நீ முன்னர் பொலிஸ்கோட்டில் வாக்குமூலம் கொடுக்கையில் நாலு ஐந்து பேர்கள் அடித்தார்கள் என்றும், அடிக்கும்போது நான் தட்டிவிட்டுக் கோயிற்பக்கம் ஓடினேன் என்றும் அவர்களுள் ஒருவர் ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்து வீழ்த்த வேறொருவன் கத்தியாற் குத்தினானெனவும் தெரிவித்திருக்கிறாய். நீ பொலிஸ்கோட்டில் சொன்ன மேற்படி சரிதையை மாற்றாமலிருக்கும்படியேதான் முதலில் உன்னிடம் யாவும் கேட்டேன்.—(காட்டி) அந்தச் சுவர் வரையில் ஓடியிருப்பேன்.

நியாய:- நீ ஏன் விழுந்தாய்?— கால் தட்டுப்பட்டுக் கீழே விழுந்தேன்.

நியாய:- இக்கதைகள் யாவும் நீங்களும் பறையர்களுமாக யோசனை செய்து ஏற்படுத்திய கட்டுக்கதையாகும்? நிற்க உன்னை அடித்தவர்களின் பெயர்கள் உனக்குத்தெரியுமா?—இல்லை. பின்னர் எனது தம்பி சொன்னதின்மேல் தெரியும்.

நியாய:- உன்னை அடித்தவர்கள் ஏரம்புவும் அம்பலவாணரும் என உனது தம்பி சொன்னானா?—ஆம்.

நியாய:- அவர் பெயர்களைச் சொன்னதும் நீ ஆட்களை மட்டிட்டுக்கொண்டாயோ?—இல்லை.

நியாய:- நீ உடையார் விசாரணை செய்யும்போது அவர்களது ஊரும் பெயரும் சொன்னாயோ?—இல்லை. பெயர் மாத்திரமே சொன்னேன்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்.)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால்ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி பி. சட்டம் இல்லாததினால் முன் மணிஓடர் அனுப்புதல் வேண்டும்

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு
(Y 27. 31 12-33) சிலோன்.

நாடிதர்ப்பணம்,

மனுடருக்கு நடக்கிற சுகதுக்கங்களை நாடிமூலமாக அறிந்து ரோகங்களை நிதானிக்கத்தக்க நூல். இதுவும் நாடிஞானதரங்கிணியும் வைத்தியங் கற்கும் மாணவருக்கு மிக உபயோகமாகும்படி தமிழ் மூலமாக எழுதி வெளியிடப்பட்டன. "நாடியறியானிலக் கணபதியபோர், நாடியறியாணி நாளையந்த-நாடி, யபதியமற்ற தறிகிலவங்காதி, யபதியமற்ற தறியாய்" என்று தேரையர் முதலாய இருஷிகளும் கூறியிருக்கிறார்கள்.

இப் புஸ்தகம் வண்ணார்பண்ணை ஸ்ரீ சண்முகநாதன் புஸ்தகசாலையில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. சிதம்பரநாதன்,
ஆயுர்வேத வைத்தியன்,
தெல்லிப்பளை மேற்பாக்கம்.
(Q. 101. 1-10 to 31-12-33.)

"காண்டிநேண்டல்"
கம்பெனியின் தொழில்
வருமானம் Rs. 1,500,000.
ஜீவிய நிதியில் சேருங்கள்.
மாதம் ரூபா 2.
10 வருஷத்தில் ரூபா. 500
ஆதாயம் பெறுவீர்கள்.
ஏழைகளும் செல்வரும்
விரும்பக்கூடிய கம்பெனி.
கிளை ஆபீஸ்கள்: சாவகச்சேரி, கண்டி, மட்டக்களப்பு.
E. P. புயூஎல். உடுவில், மானிப்பாய்,
இலங்கைப் பிரதம பரிசோதகர்,
(H. 77. 17-8-33 to 16 2 34.)

மகாராஜ தத்துவ
சாலாமிஸ்ரி லேகியம்.

ஒரே வேளையில் ஆண்சிங்க மாவீர்கள்.

இழந்துபோன பலத்தையும் தளர்ந்துபோன நரம்புகளையும் லேகியம் சாப்பிட்ட ஒருமணிநேரத்தில் பலத்தை கொடுக்கும இந்த லேகியத்தைப் பலநாளும் பல பெயருக்குங் கொடுத்து நாம் கண்ட குணங்களாவன:

நாடி நரம்பு, தாதுக்களின் பலக்குறைவு, என்புச்சூடு, வீரியநஷ்டம், நரம்புத் தளர்ச்சி, சதா இடுப்புவலி, நெஞ்சுவலி, நெஞ்சடைப்பு, மலச்சிக்கல், பசிமந்தம், பித்தாதிக்க உஷ்ண வாய்வுகள், கிருமிரோகம், நீர்ச்சீர் வியாதிகள், சரீரத்தில் ஓடித்திரியும் பற்பல வாய்வு ரோகங்கள், விரைவாதம், பாண்டு, சோகை, கைகாலசதி, கைகால் எரிவு, கண்ணெரிவு, மறதி, ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவிர்த்தியாகி தேக உஷ்ணத்தைச் சமப்படுத்தி நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து எவர்க்கும் வீரிய உற்சாகத்தைக் கொடுத்துப் புத்திர சம்பன்னராய் வாழச் செய்திருக்கிறது.

40 நாள் 80 வேளை டின்	ரூ. 10 - 0 - 0
20 நாள் 40 வேளை டின்	ரூ. 5 - 0 - 0
10 நாள் 20 வேளை	ரூ. 2 - 12 - 0

ஹக்கீம் V. A றஜாக் கம்பனி,
பறங்கிப் பேட்டை, (S. A. Dt.)
(Y. 142. 20-11-33to19-11-34)

றங்கூன் தேக்க மரங்கள்.

தேக்கமரங்களிலும் பலவினங்களிருக்கின்றனவென்பதும்
அவற்றுள்
றங்கூன் தேக்கமரங்களே
எவ்வகையாலும் சிறந்தன வென்பதும்
எவரும் மறுக்கமுடியாத உண்மை.

தற்போது புதிதாக றங்கூனிலிருந்து பல தணிசுகளில்
மரங்களும் சிலாகைகளும்
வரவழைத்திருக்கின்றோம்.

தேவையானவர்கள்:
பெரியகடையிலுள்ள எங்கள் ஸ்ரோரில்
சகாயமான விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணத்தில் மிகவும் கியாதிபெற்றதும்
மற்ற எக்கம்பனியிலும் பார்க்க
ஒவ்வொரு வருஷத்திலும் கூடுதலாய்த் தருவிப்பதும்
செலவாகி வருவதுமான
ஸ்ரான்டேட் கம்பனி
பவுண் மார்க் ஓடுகளும்
எங்களிடமே விலைக்கிருக்கின்றன.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
ரெலிபோன் நம். 93.

புங்குடுதீவுக் கலக வழக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

நியாய:- அவர்களுடைய தகப்பன் மார்களுடைய பெயர்களும் சொன்னாயோ?—இல்லை

நியாய:- உனது தம்பிக்கும் அவர்கள் பெயர் தெரியுமா?—இல்லை.

நியாய:- நீ பொலிஸ்கோட்டில் செல்லமுத்துவும அம்பலவாணருமெனச் சொன்னாயோ?—இல்லை.

நியாய:- நீயும் உடையாரும் சம்பாஷிக்கும்போது குருசு இருந்தானா?—ஆம். சற்று வெட்ட நின்றான்.

நியாய:- நீயும் அவரும் கதைத்தது அவனுக்குக் கேட்டிருக்குமா?—சிலது சிலது கேட்டிருப்பான்.

நியாய:- குருசு உன்னிடம் எரம்புவும் சின்னையாவுமெனச் சொல்லித் தகப்பன்மார்களின் பெயர்கள் தெரியாது எனத் தனித்தானல்லவா?—ஆம்.

நியாய:- புங்குடுதீவில் இந்த எரம்புவை விட வேறு எரம்புமார்களும் இருக்கின்றனரா?—ஆம்.

நியாய:- அந்த எரம்புவாயிருக்கலாமோ இந்த எரம்புவாயிருக்கலாமோ என உங்கள் ஆட்கள் கதைத்தபடியால்தான் இந்த எரம்பு இதற்கு எதிரியாக நிற்கிறார்?—(பதிலில்லை.)

நியாய:- இப்பொழுது இந்த எரம்புதானென நீ சத்தியம் பண்ணிச் சொல்லுவாயல்லவா?—எனக்கு இப்பொழுது தெரியாது ஐயா!

நியாய:- உங்கள் ஆட்கள் யாபேரும் சொல்லித்தந்தவண்ணம் உனது தம்பியும் சொன்னானல்லவா?—அவன் ஊமைபட்டவன். அவனுக்கு எல்லோரையும் தெரியும். எரம்புவின் குறிப்பைப்பற்றி உடையாரிடம் தெரிவிக்க உடையார் எரம்புவின் தந்தையின் பெயர் முதலியவற்றை விசாரணை செய்தார்.

இரண்டாவதாக மரியான் குருசு என்பவனை விசாரணை செய்கையில அவன் கொடுத்த வாக்குமூலம் பின்வருமாறு:-

"சென்ற வைகாசிமீ" 20உ சனிக்கிழமை இரவு கோவிலில் நாங்கள் சயனித்துவிட்டு அடுத்தநாள் வீட்டிற்குப் போக புறப்பட்டுப்போகும்போது நடுவழியில் அநேக திரளான ஜனங்கள் வரக் கண்டேன். அவர்களுள் அம்பலவாணரும் எரம்புவுமே அண்ணனுக்கு அடித்தவர்கள். அம்பலவாணர் அண்ணனுக்கு ஓர் அடியடிக்க அண்ணன் தட்டினார். அதன்மேலும் ஓர் அடியடிக்க அண்ணன் கீழே விழுந்தார். விழுந்துகிடக்கும்போது எரம்பு கத்தியாற் குத்தினார். எனக்கு ஒருவரும் ஒன்றுஞ் செய்யவில்லை. அப்புவையும் 7, 8 பேர் சேர்ந்து அடித்துத் தூக்கிக்கொண்டுபோய் மீண்டும் அடித்தார்கள். உடனே நான் கோவிலுக்கு ஓடினேன். பின்னர் அண்ணனும் கோவிலுக்கு வந்தார். அப்பொழுது தொடக்கம் பொலிஸ் வருமவரையில் நாங்கள் கோவிலிலேயே இருந்தோம். ஞாயிற்றுக்கிழமையன்று பின்னேரம் 3½ மணியளவில உடையார் என்னிடம வாக்குமூலம் கேட்கும்போது எரம்புவையும் அம்பலவாணரையும் கண்டேனெனச் சொல்லியிருக்கிறேன். எரம்பு பெருங்காட்டியிருப்பவரென்றும், இளைதாரியெனவும், அம்பலவாணர் வண்டில் விடுகிறவரென்றும், மண் இழுக்கிறவரென்றும் சொல்லியிருக்கிறேன்."

மீட்டும் சாட்சியை நியாயவாதி எலியன் பெரைரா அவர்கள் குறுக்கு விசாரணை செய்தபோது சொல்லியவை:-

நியாய:- அம்பலவாணருடையவும் எரம்புவுடையவும் ஊர்களின் பெயர் உனக்குத் தெரியுமா?—பெருங்காடு.

நியாய:- நீ சொன்ன குறிப்புகளிலிருந்து உடையார் ஆட்களை மட்டிட்டுக்கொள்ள முடியுமா?—நான் சொன்னதும் உடையார் சிறிது யோசித்துவிட்டு எழுதினார்.

நியாய:- வேறு பறையரையும் கேட்கவேண்டிய அவசியமில்லையோ?—ஒருவரையும் கேட்கவில்லை.

நியாய:- அப்பொழுது உடையார் உன்னிடம் தனக்கு ஆட்களைத் தெரியும் எனச் சொன்னாரா?—சொல்லவில்லை.

நீதிபதி:- உனதண்ணன் அந்த எரம்புவோ இந்த எரம்புவோவெனத் தத்தளிக்கையில் நீங்கள் யாவரும் இந்த எரம்புவெனச் சொல்லிக்கொடுத்தீர்கள்?—தெரியாது.

நியாய:- நீ பொலீஸ் கோட்டில் நீதவானிடம் அவர்களின் பெயரைக் கொடுத்தபோது நீ பதி உடையாரிடம் விபரம் சொல்லியிருக்கிறாயோ எனக்கேட்க நீ இல்லையெனத் தெரிவித்திருக்கிறாய் அத்துடன் அவர்கள் எங்கிருப்பவர்களெனவும் சொல்லவில்லை?—இருக்குமிடம் சொல்லியிருக்கிறேன்.

நியாய:- நீ நீதிபதிக்கு வேறோர் விதமாயும் இங்கு இப்படியும் சொன்னதற்குக் காரணமென்ன?—பதிலில்லை.

நியாய:- உனக்குக் காரணம் தெரியாவிட்டால் நான் சொல்லுகிறேன் கேள்..................

அதன்மேல் சவரி மரியான் சாட்சியஞ் சொல்லியதன்பின் புங்குடுதீவுவாசியாகிய பிரான்சிஸ் கட்சேத்திரம் என்பவனை விசாரணை செய்கையில் அவன் கூறியது பின்வருமாறு:-

"நான் கடற்றொழில் செய்பவன். வயது 50. இருப்பது புங்குடுதீவு. நான் கறுத்த மனிதன்.

நீதிபதி:—நீ வெள்ளைக்காரனல்லவென்பது தெரியும். என்ன சாதி?

"நான் வலங்கைமான் ஜாதியைச் சேர்ந்தவன். வழமையாகக் கோவிலுக்குப் போவேன். அன்றைத்தினம் நடந்த விஷயம் நினைவிலிருக்கிறது. அன்று காலை கலகம் நடந்தமையால் நான் கோவிலுக்குப் போகவில்லை. வீட்டிலிருந்தே மரியானை அடித்தார்களெனக் கேள்விப்பட்டேன். வேளாளராகிய இவர்கள் (எதிரிகள்) பொல்லுகள், கல்லுகள் முதலியத்துடன் நின்றார்கள். கூட்டமான ஜனங்கள் மரியானை அடித்ததின்பின் சவரி வீட்டுப் பக்கமாகப் போனார்கள். நான் இருந்த இடத்திலிருந்து சவரிவீட்டைப் பார்க்கத் தக்கதாக இருந்தது. அங்கு சென்று கல்லாலெறிந்தார்கள். அந்தத் தருணத்தில் அங்கு சவரியைக் காணவில்லை ஆனால் அவனை ஆனசி வீட்டின் பிற்பக்கத்திற் கண்டேன். அதன்பின் அவர்கள் என் வீட்டை நோக்கி வந்து எனது படலையின்முன் நின்று எறிந்தார்கள். அப்போது சவரி எனது பிற்பக்க வேலியால் தெற்கு நோக்கிப் பார்த்துப் பார்த்துப் போனான். அவன் போகும்போது அவர்கள் "ஆந்தாப் போருனெடா" என்று சொல்லி அவனுக்கும் (சவரிக்கும்) எனக்கும் கல்லாலெறிந்தார்கள். பின்னர் கல்லு பொல்லுடன என் வீட்டினுட் புக நான் பயமிகுதியினால் அறையினுட் புகுந்துவிட்டேன். அவர்கள் வீட்டினுள் வந்ததும தட்டிகள் சேத்தைகள் முதலியவற்றைப் பிடுங்கி எறிந்துவிட்டு என்னைப் பிடித்துக்கொண்டுவந்து முற்றத்தில்விட்டுப் பொல்லுகளாலடித்தார்கள். சவரியை ஒன்றுஞ்செய்யவில்லை. என்னையடித்ததன்மேல் (12) சின்னையா கதிரவேலு என்பவர் நெருப்புப்பெட்டியினுதவிகொண்டு எனது வீட்டைக் கொளுத்தினார். அவரை வட்டன் எனவும் அழைப்பதுண்டு. அதன்மேல் எனக்கு அறிவு மயங்கியபடியால் ஒன்றுந் தெரியவில்லை. பின்னர் கோவிலிலேதான் அறிவு வந்தது. அதன்முன் என்னை அவ்வூர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றது எனக்குத் தெரியாது. திங்கட்கிழமையன்று ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். இவ்வெதிரிகளுடனாவது வேறு வேளாளர்களுடனாவது எனக்கு ஓர்விதமனஸ்தாபமுமில்லை. (1) செல்லப்பா, (2) அப்புக்குட்டி, 15) தம்பையா, (16) சிற்றம்பலம், (12) கதிரவேலு (நெருப்புக் கொளுத்தியவர்), (14) ஆறுமுகம் அம்பலவாணர், (11) நாகமுத்து, (13) கோவிலன், (17) முத்தன், (18) இராமநாதர், (20) காத்தி சின்னத்தம்பி, (5) நாகலிங்கம், (19) சுப்பர், (3) ஏகநாதர் சின்னத்தம்பி, (10) உலகநாதர் அம்பலவாணர், (36, இராமு, (9) சரவணை, முதலியவர்களே (நாட்டி) எனக்கு அடித்தவர்கள். இவர்களைக் கலகம் நடைபெறுவதன்முன்னரும் தெரியும். நான் பொலிஸ் கோட்டில நாசிமகர் கணபதிப்பிள்ளையெனச் சொல்லவில்லை.

மூன்றாம் நாள் விசாரணை.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் மீண்டும சனிக்கிழமையன்றும் குறித்த கலக வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அன்றும பிரான்சிஸ் கட்சேத்திரம் என்பவனை ஏலியன் பெரைரா அவர்கள் குறுக்கு விசாரணை செய்தார்:

நியாய:- நீ காட்டிய வேளாளர்களைவிட உனது அயலில் வேளாளர்கள் இருக்கிறார்களா?—ஆம்.

நியாய:- எத்தனைபேர் இருக்கிறார்கள்?—சுமார் மூன்றுபேர்.

நியாய:- அவர்களுள் உனக்குத் தெரிந்தவர்களின் பெயர்களுட் சிலவற்றைச் சொல்லுபார்க்கலாம்?—அவர்களைக் கொண்டுவந்துவிட்டால் அடையாளங் காட்டுவேன்.

நியாய:- அவர்களை இங்கு உனக்குமுன் கொண்டுவர இயலாது. நீ உன் மனதில் நினைத்துச் சொல்ல முடியுமா? முடியாதா?—முடியாது.

புளியங்கூடலிற் கத்திக்குற்று.

வழக்கு விசாரணை விபரம்.

(நமது நிருபர்.)

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சரவணை (புளியங்கூடல்) வாசியாகிய வேளாள ஜாதியைச் சேர்ந்த நாகலிங்கம் மகள் வள்ளியம்மை அல்லது இளைபிள்ளை என்னும் பெண் தனியாகத் தனது வீட்டிலிருக்கப் பயந்து, தனது காணிகளைச் செய்கைபண்ணும் நீக்கிலான் பாவிலு என்னும் நழுவ ஜாதியைச் சேர்ந்தவனைத் துணையாக அங்கு வசிக்கும் வண்ணம் செய்துகொண்டாள். இதற்குக் காரணம் அவ்விடத்துத் துஷ்டர்களுக்குப் பயந்ததனால்தான் என அறியக்கிடக்கின்றது அவர்களைப்பற்றி மணியகாரனிடமும் அனேகதடவைகள் முறையிட்டிருக்கின்றாளாம். சென்ற நவம்பர் மாதம் 28-ந் தேதியன்று பகல் பாவிலுவென்பவன் தான் செய்கைபண்ணும் வள்ளியம்மையினது காணிக்குச் சென்றபோது ஒரு சிறு தொகையினர் அவனை விரட்டிக் கலைத்தார்களாம். அன்றிரவு யாவரும் சயனித்ததன்மேல் சுமார் 25 பேர் வள்ளியம்மையின் வீட்டுட்புகுந்து, அங்கு நித்திரை செய்துகொண்டிருந்த பாவிலுவையும்வள்ளியம்மையையும் பொல்லினாலடித்தும் கற்களாலெறிந்தும் கத்தியாற்குற்றியும் பாரதூரமான காயங்களை வருவித்தார்களாம். அதன்மேல் அவள் குடியிருந்த வீட்டையும் தீக்கிரையாக்கினார்களாம். காயக்காரர்கள் இருவரும் இன்றுவரை ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியிலிருக்கின்றார்கள். பாவிலு தன்னை நெருங்கியவர்களுள் இருவரைக் கரங்களில் கத்திகொண்டு தாக்கியதாகவும், அவர்களிருவரும நழுவ ஜாதியைச் சேர்ந்தவர்களெனவும் செய்தியெட்டியிருக்கின்றது. இது சம்பந்தமாக 5பேர் பிடிபட்டிருக்கிறார்களென்றும், 9 பேருக்கு விறாந்துவிடப்பட்டதெனவும் கேள்வி. இது சம்பந்தமாகப் பொலீசார் புலன் விசாரித்ததன்மேல், சென்ற சனிக்கிழமை ஊர்காவற்றுறைப் பொலிஸ்கோட்டில், யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி என். முனிசிங்கி முன்னிலையில், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஜோசப் என்பவர், 14 பேருக்கு எதிராக, சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி, அபாயம் விளைக்கக்கூடிய கத்தி, கல்லு, பொல்லு முதலியவற்றுடன் வள்ளியம்மையினது கிருகத்திற்குச் சென்று வள்ளியம்மையையும் பாவிலுவையும் கத்தியாற் குற்றியும் பொல்லாலடித்தும் பாரதூரமான காயங்கள் வருவித்ததுடன், வள்ளியம்மை குடியிருந்த வீட்டையும் தீக்கிரையாக்கினார்களெனக் குற்றம்சாட்டினார் எதிரிகளுள் (1) இராமு தில்லையம்பலம், (2) முருகேசு செல்லப்பா, (3) கந்தையா கதிரவேலு, (4) கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம், (5 சிவகுரு பொன்னம்பலம், (6) கந்தையா சிவகுரு, (7) கந்தையா இராசையா, (8) கந்தையா செல்லையா, (9) கணபதி மயில்வாகனம், (10) நாகமுத்து முத்துக்குமாரு, (11) முத்துக்குமாரு சுப்பையா முதலியவர்கள் நீதிஸ்தலத்திற் சமுகமளித்தனர் எதிரிகளுள் இருநழுவர்கள் மாத்திரம் நீதிஸ்தலத்தில் சமுகமளிக்கவில்லை.

பிறக்ரர் கே. வீ. சின்னத்துரை வழக்கை நடத்தினார். எதிரிகளின் சார்பாக பிறக்ரர் ரி. சி. இராசரெத்தினமும், பிறக்ரர் எச். ஆர். அரியகுட்டியும், பிறக்ரர் அல்பிறெட் சுவாம்பிள்ளையும் ஏற்பட்டனர்.

விசாரணையின் தொடக்கத்தில் இரு இராசரத்தினம் நீதிபதியை நோக்கி, எதிரிகளுள் ஒருவராகிய சின்னத்தம்பி வல்லிபுரம் இது சம்பவம் நடைபெறுவதற்கு சுமார் 2 மாதங்களுக்கு முன்னாகக் கொழும்புக்குப் போய்விட்டார் எனத் தெரிவித்தார்.

எதிரிகள் யாவரும் தங்களது குற்றச்சாட்டுகளை வாசிக்கும்போது கேட்டுக்கொண்டதன்மேல் 1-ம் எதிரி, "நான் சுற்றவாளி. இதுசம்பவம் நடைபெறும்போது நான் அவ்விடத்திலில்லை. செவ்வாய்க்கிழமை பகல் அல்லைப்பிட்டிக்குச் சென்று புதன்கிழமையன்று இரவுதான் வந்தேன். அங்கு நின்றதற்கு கந்தையா, சந்திபாப்பிள்ளை என்ற இருசாட்சிகளுண்டு' எனவும், 5-ம் எதிரியைத் தவிர்ந்த மற்றைய எதிரிகள் ஒவ்வொருவரும், "நான் சுற்றவாளி. இதுவிஷயம்பற்றி எனக்கு யாதொன்றும் தெரியாது" எனவும், 6-ம் எதிரி, "நான் சுற்றவாளி. அன்றிரவு நான் வீட்டில் நித்திரைசெய்தேன்" எனவும் சொன்னார்கள்.

அதன்பின் சரவணை வாசியாகிய தில்லையர் வீரகத்தி என்பவரை விசாரணை செய்தபோது அவர் கூறிய சாட்சியம் பின்வருமாறு:

"சென்ற நவம்பர் மாதம் 28-ந் திகதியன்று காலை 7 மணியளவில் வள்ளியம்மை எனது வீட்டிற்கு வந்து "சாட்சிகளுக்குக் கட்டளைகள் எடுப்பதற்காக ஊர்காவற்றுறைக்குப் போகிறேனெனத் தெரிவிக்க, நான், தனியே போக வேண்டாமெனவும் நானும் துணையாக வருகிறேனெனவும் தெரிவித்தேன். கட்டளையெடுக்க வந்த வழக்கில் நாகமுத்து, தில்லையம்பலம், முருகர், செல்லப்பா, சின்னத்தம்பி, வல்லிபுரம் முதலியவர்களே எதிரிகள் என்பது எனக்குத் தெரியும். நாங்கள் கதைத்துக்கொண்டு நிற்கும்போது எனது படலைமுன் சிவகுரு பொன்னம்பலம் வந்து நின்று அவளை நோக்கி "உனது வீட்டிற்கு எவரைக் கொண்டு நெருப்பு வைப்பேன்" எனச் சொல்லியதுடன் "வா, சனத்தி எங்கே போகிறாய்" எனக் கூப்பிட்டார். உடனே வள்ளியம்மை தனது வீட்டிற்குப் போய்விட்டாள். பின்னர் பொன்னம்பலம் என்னை நோக்கி "இராவுக்கு வாடா" என்று சொல்லிவிட்டுப் போனார். அன்று மத்தியானம் 2 மணிபோல் பாவிலு மணியகாரன் வீட்டிற்குப் போய்த் திரும்பிவரும்போது, தான் செய்கைபண்ணும் வள்ளியம்மையின் காணியிற் புக தில்லையம்பலம், செல்லப்பா, பொன்னம்பலம், சிவகுரு, மயில்வாகனம் முதலியவர்கள் அவனை விரட்டிக் கலைத்தார்கள். அவன் பயமிகுதியினால் ஓடும்போது இரு இரட்டைமாட்டு வண்டிகள் எதிரே வந்துகொண்டிருந்தது அவற்றை மறித்து முறையிட்டான். அவ்வண்டில்கள் மணியகாரனுக்குச் சொந்தமானவை. இரவு 10 மணிபோல் நான் நித்திரை செய்துகொண்டிருந்தபோது வள்ளியம்மை எனது வீட்டிற்கு வந்து என்னை எழுப்பினள். நான் வெளியே வந்து அவளைப்பார்க்கும்போது அவளது தேகத்தில் இரத்தம் அதிகமாக ஓடிக்கொண்டிருந்தது. காயங்களை எனக்குக் காட்டி, பொலீஸ் விதானையிடம் போவதற்குத் துணையாக வரும்படி கேட்டாள், அந்நேரத்தில் வள்ளியம்மை என்னிடம் தில்லையம்பலம், சிவகுரு, பொன்னம்பலம், கந்தையா சிவகுரு, முருகர் செல்லப்பா, இன்னுமொருவர் முதலியவர்களே தன்னை இக்கோலத்திற்குள்ளாக்கியவர்களெனவும் சுமார் 25 பேர்கள்வரையில் தனது வீட்டிற்கு வந்தார்களெனவும், அவர்கள் அடித்தமையால் பாவிலு இறந்துபோனானெனவும் சொன்னாள். வீட்டினுள் அடித்ததும் தான் ஓடிப்போக மதவடியில்விட்டும் அடித்தார்கள் எனவும் அவர்களுள் தன்னை வெட்டியது செல்லப்பாவெனவும் அடித்தது வைத்திலிங்கம் எனவும் தான் கீழே வீழ்ந்துவிட்டதாகவும் அதன்மேல் அவர்கள் தெற்குநோக்கிப் போனார்கள் எனவும் சொன்னாள் பின்னர் நான் மனைவியை விதானை வீட்டிற்குப் போகும்படி தெரிவித்து நான் மணியகாரன் வீட்டிற்குப் போய் அவரைக் கூப்பிட்டேன். பதிலில்லை. அடுத்தநாள் எனக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் வழக்கிருந்தமையால் போய்விட்டேன்."

அதன்பின் நாரந்தனை வாசியாகிய மரமேறுந் தொழிலையுடைய சந்தியாகு மரியான் என்பவனை விசாரணை செய்கையில் அவன் கூறியதாவது:

"வைத்தியான் மனுவல் என்பவனை எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். அவனிடம் கள்ளுச் சீவுவதற்கு லைசென்ஸ் இருக்கிறது. சென்ற நவம்பர் மாதம் 23-ந் திகதியன்று எனது வீட்டிற்குவந்து தனது பெண்சாதிக்குச் சுகமில்லையெனவும், தனக்காக அல்லைப்பிட்டிக்குச் சென்று கள்ளுச் சீவும்படியும் கேட்டுக்கொண்டதன்மேல் நான் அல்லைப்பிட்டிக்குச் சென்று 10 நாட்களாகக் கள்ளுச் சீவிக்கொடுத்தேன். அதன் பின்னர் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன்மேல் மனுவலிடம் அவனது வீட்டிற்குச் சென்றேன். அன்றும் இன்றைவரையிலும் நான் அவனைக் காணவில்லை. இப்பொழுது அவனுக்காகச் செல்லன் என்பவன் கள்ளுச் சீவுகிறான்"

பின்னர் நீதிபதி எதிரிகளைத் தனித்தனி ரூபா 300 பிணையில் விடுத்து வழக்கை வருகிற 22-ந் திகதிக்குத் தவணையிட்டார்.

புங்குடுதீவுக் கலகவழக்கு

நியாய:- இரண்டொருவரது பெயரைச்சொல்?—இயலாது.

நியாய:- உனக்குச்சொல்லித்தந்த பெயர்களைச் சொல்லிவிட்டாய்; அதனால் இப்பொழுது முளிக்கின்றாய். இவ்வகையான ஏமாற்றுதல் இங்கு விடவேண்டாம். சாட்சியே! சிறுதமாசிற்காகவே கேட்கிறேன். சொல் பார்ப்போம்?—நினைப்பில்லை ஐயா.

நியாய:- கலகம் நடந்தமையால் கோவிலுக்குப் போகவில்லையெனத் தெரிந்தமை உனது நினைவிலிருக்கும். கலகம் நடைபெற்றமை உனக்கு எப்படித் தெரியும்?—ஊரவர்கள் கதைத்தமையால் தெரியும்.

நியாய:- நீ இக்கோட்டில் மரியானை அடித்தது கோவிலிலிருந்து வரும் போதெனக் கூறியிருக்கிறாய். என்ன காரணத்திற்காகப் பொலிஸ்கோட்டில் பூசைக்குப் போகும் போதுதான் எனத் தெரிவித்தாய்?—அப்படி நான் சொல்லவில்லை.

நியாய:- உனது வீட்டிற்குச் சவரி வந்தானோ?—வளவிற்குள் வந்தான் வீட்டிற்குள் வந்தானோவென்பது தெரியாது.

(தொடர்ச்சி 5-ம்பக்கம்.)

புங்குடுதீவுக் கலக வழக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

நியாய:- நிரளான சனங்கள் உனது வளவின் படலையின் முன்னின்று என்ன செய்தார்கள்?—ஐயா, சுமார் 300 பேர் வளவில் எனது படலையின் முன்னின்று கற்களால் எனது இல்லத்திற்கு எறிந்தார்கள். அக்கற்கள் செத்தையைப் புட்டுக்கொண்டு தட்டியால் நுழைந்து வீட்டிற்குள்ளிருந்த சட்டிகள், பெட்டிகள், பானைகள், முட்டிகள் யாவற்றிலும் மோதி, தடாம்புடாம் என சத்தம் செய்தது.

நியாய:- அப்பொழுது நீ எங்கு நின்றாய்?—நான் அறையினுட் பயமிகுதியினால் புகுந்து நின்றேன், கற்கள் அங்கும் என்னை நிற்க வொட்டாதபடி அதிகமாக வந்து வீழ்ந்தன.

நியாய:- பின்னர் யாதுநடைபெற்றது?—அவர்கள் என்னைப்பிடித்து முற்றத்திற்குக் கொண்டுவந்து அடித்தார்கள். எனக்குத்தலை சுற்றியது. கீழே விழுந்தேன். பின்னர்த் தூக்கிக்கொண்டுபோய் வீட்டிற்குப்பக்கமாகப்போட்டுவிட்டார்கள். அப்பொழுது எனக்குச் சித்தறிவிருந்தது.

நியாய:- ஆஸ்பத்திரியில் நீ நீதிபதிக்கு வாக்குமூலம் கொடுக்கும்போது உனக்கு மூளைக்கலக்கம் ஏற்பட்டிருந்ததா?—ஆம்.

நியாய:- நீ வாக்குமூலம் கொடுக்கையில் உனக்கு அறிவு இருந்ததே? அறிவு இருக்கையினாற்றானே வாக்குமூலங்கொடுத்தேன்.

நியாய:- அப்போது போலீஸ்கோட் வாக்குமூலம் உண்மையானது தானா?—ஆம்.

நியாய:- வாசித்த நீ போலீஸ் கோட்டில் கொடுத்த வாக்குமூலத்திற்கும் இசகு 10 நிமிடங்களின்முன் சொன்ன வாக்குமூலத்திற்கும் வித்தியாசமிருக்கிறதே?—நான் பொய் சொல்லவில்லை. வேதக்காரனானமையாற் பொய் சொல்லமாட்டேன்.

நியாய:- விஷயத்தை ஆராய்ந்து பார்த்தவிடத்தில் நீதான் உனதுவீட்டிற்கு நெருப்புவைத்திருக்கிறாய்?—இல்லை.

நியாய:- உன்னைவிட வேறுயாரோ தீவைத்திருக்கிறார்கள்?—ஆம்.

நியாய:- உனது வீட்டிற்கு நெருப்பு வைத்துவிட்டார்களென உனக்கு ஆத்திரம் வரவில்லையென்பது உண்மைதானா?—ஆம்

நியாய:- எவ்வளவுநஷ்டம்?—சுமார் 1200 ரூபா பெறுமதியுள்ள சாமான்களும் இல்லமும் எரிந்துவிட்டன.

நியாய:- நீ அந்த ஆயிரத்து இருநூறு ரூபாவின் அரைவாசி மதிப்புள்ளவனா? மூன்றிலொரு பாகமதிப்புள்ளவனா? உனது முயற்சியென்ன?—எல்லாத் தொழிலுஞ்செய்வேன்.

நியாய:- அப்போ உனக்கு ஏன் ஆத்திரம் வரவில்லை?—ஆத்திரமடைந்து நாங்கள் என்ன செய்யமுடியும்.

நியாய:- வழக்கு வைக்கலாமல்லவா?—வழக்கு நடக்கிறதுதானே.

நியாய:- விதானையார் உன்னிடம் வாக்குமூலம் ஒருபோதும் கேட்கவில்லையா?—கேட்கவில்லை

நியாய:- யோசனை செய்துசொல். கோவிலில் விதானை உன்னைக் கண்டாரல்லவா?—பொலிசார் வாக்கு மூலம் எடுத்ததின்மேல் என்னைக் கேட்டார்கள். நான் வீடு எரிந்ததைப் பற்றிச் சொல்லவில்லை.

நியாய:- சண்முகத்தைச் சுட்ட குருசுவுக்கு நீ இனமா?—ஆம்.

நியாய:- உனது மருமகன் எங்கு இருக்கிறான்?—நானும் அவனும் எனது இல்லிற்றான் இருக்கிறோம்.

நியாய:- கோவிலில் நடிக்கவிருந்த நாடகத்தில் பிள்ளையாரை உதைப்பதுடன் பிராமணனை மிதிக்கவும் கூடுமல்லவா?—இல்லை.

நியாய:- உற்று யோசித்துச் சொல்?—தெரியாது.

நியாய:- அது உண்மையாக இருந்தால் சைவர்களுக்கு மிகவும் ஆத்திரத்தைக் கொடுக்குமல்லவா?—பிள்ளையார் எங்களுக்குத் தெய்வந்தான் இந்துக்களுக்குத்தெய்வந்தான். (சிரிப்பு

நியாய:- ரோமன் கத்தோலிக்க சமயத்தில் நீ படித்த பத்துக்கற்பனைகளுள் இரண்டாங் கற்பனை உனக்கு விளங்காதோ?—தெய்வமொன்றுதானையா.

நியாய:- உனது குருவானவர் நீ இம்மாதிரிச் செய்வதை அறிந்தால் உன்னைத் தண்டனையினுள்ளாக்குவார் என்பதையு அறிந்துகொள் நானும் எனது எண்ணத்தின்படி நடப்பேன் குருவானவரும் தனது எண்ணத்தின்படி நடப்பார். (சிரிப்பு)

நியாய:- வீணாக விளையாட்டுத்தனமாக நடவாதே பிள்ளையாரை உதைத்தால் ஆத்திரம் வருமோ? வாராதோ?—பிள்ளையார் என அறிந்தால் ஏன் உதையப் போகிறார்கள்.

நியாய:- நீ என்னைக் கேள்வி கேட்கவேண்டாம். ஆத்திரம் வருமோ? வாராதோ? எனச் சொல்?—எங்களின் வேதம், உங்களின் வேதம் என்ற பாகுபாடு எனக்கில்லை. எனக்கு எல்லாம் சமயந்தான். எல்லாம் கடவுள்தான். (சிரிப்பு)

நியாய:—அந்த நடனம் நிற்பாட்டப்பட்டதல்லவா?—ஆம்.

நியாய:- நிற்பாட்டிய நாடகத்திலிருந்து நீங்கள் அதிக சந்தோஷமடையக் காத்திருந்தீர்களே?—பழகியவர்கள் காத்திருந்தார்களேயொழிய நான் காத்திருக்கவில்லை.

நியாய:- நீ பார்ப்பதற்காகக் காத்திருந்தாயல்லவா?—நடித்திருந்தால் பார்ப்பேன்.

நியாய:- வேளாளர்கள் நாடகத்தை நிற்பாட்டியமையால் பறையராகிய உங்களுக்கு ஆத்திரமுண்டல்லவா?—இல்லை

நியாய:- நான் சொல்வதைக் கேள். நாடகத்தை நிற்பாட்டியமையால் பறையருக்கு ஆத்திரம், வேளாளர்களுக்கு வெற்றி. ஆதலால் பறையனாகிய மரியான் சின்னத்தம்பிக்கும், வேளானாகிய செல்வத்துரைக்கும் சண்டை உண்டாக சண்முகம் துணையாக வந்தசோ, பறையன் சுட்டான். அப்பறையனைக் காப்பாற்றும் வண்ணம் எல்லாப் பறையருமாகச் சேர்ந்து அவனைத் தூக்குமரத்திற்கனுப்பாது தடுக்கப் பார்த்தீர்கள். உங்கள் கோவிலிலுள்ள விளக்குகளையெல்லாம் நீங்கள் உடைத்துவிட்டு வேளாளர்கள் உடைத்தார்களெனக் கதை கட்டினீர்கள்?—யார் உடைத்ததென எனக்குத்தெரியாது.

நியாய:- நாடக மண்டபத்திற்கும் நெருப்பு வைத்துவிட்டு வேளாளர்களைச் சாட்டப் பார்த்தீர்கள்; வாய்க்கவில்லை?

இதன்பின் புங்குடுதீவுக் கத்தோலிக்க ஆலயத்தின் மூப்புவின் மகன் விசாரணை செய்யப்பட்டபின் காபிரியேல் பிலிப்பு என்பவன் சாட்சியஞ் சொன்னான்:-

"வயது 27; புகையிலைக் கூலியாக மன்னாரில் வசிப்பவன்; சொந்த இடம் புங்குடுதீவு. சென்ற மேமாதம் 21-ம் தேதி, எமது ஆலயத் திருவிழாவுக்காகப் புங்குடுதீவுக்கு வந்தேன்: ஞாயிற்றுக்கிழமை பூசைக்குப்போனேன்; காலை 8½ மணிக்கு அது முடிய நண்பர்கள் இருவருடன் விசுவாசத்தின்வீட்டுக்குப்போனேம்; விசுவாசத்தின்வளவில் நிற்கும்போது ஆலயத்தின் கிழக்குப்பக்கமாக ஓர் கலகச்சத்தம் கேட்டது; பொல்லுகளுந்தடிகளுங்கொண்டுஓர் ஜனக் கூட்டம் அங்கு மிங்குமாக ஓடித்திரிந்தது; பொன்னர் கந்தையா, நாகலிங்கம், குழந்தை கந்தையா என்பவர்கள் முன்னுக்குப்போக, 15, 20 பேர் அவர்களுக்குப்பின்னால் பொல்லுகள், தடிகளுடன் ஓடினர்; அவர்கள் ஆலயத்தை நோக்கி நான் நின்ற இடத்திற்கு ஓடிவந்தனர் அவர்களில் நாகலிங்கம் என் மடியிற் பிடிக்க, பொன்னர் கந்தையா என் விரல்களிலிருந்த மோதிரங்களைப் பிடுங்கினார்: "ஏன் இப்படிச்செய்கிறீர்க"ளென நான் கேட்டபோது, அவர்கள் என்னைப் பொல்லுகளினாலும் மோட்டர்க்கார் 'வயரினா"லு மடித்தனர். அதன்பின் அவர்கள் சென்றுவிட நான் அங்கேயேகிடந்துவிட்டேன். இப்போதும் எனக்கு அவர்கள் அடித்த அடையாளங்கள் தேகத்தில் இருக்கின்றன. பொழுதுபடும் நேரம், மெல்ல எழுந்து தேவாலயத்துக்குச் சென்றேன்."

மிஸ்ரர் எலியன் பெரீராவின் குறுக்கு விசாரணையில் சாட்சி சொல்லியன:

"குருசு வீட்டுப் பக்கமாகத்தான் முதன்முதற் கலகச் சத்தம் கேட்டது. அப்போதுதான் ஜனக் கும்பல் என்னைநோக்கி ஓடிவந்தது. முதல், ஜனக்கும்பல், தேவாலயத்துக்குக் கிழக்குப் பக்கமாயுள்ள தரவையில் அங்குமிங்குமாக ஓடித்திரிந்தது. அதன்பின் தான் என்னை நோக்கி வந்தது. தகுதிக் கேற்றவாறு பறையர் கடுக்கன்களும் மோதிரங்களும் அணிவது வழக்கம்."

மரியான் சூசையின் சாட்சியம்.

"எனது வயது 35; தொழில் வைத்தியம்; பறைய ஜாதியைச் சேர்ந்தவன்; வேளாருக்கும் வைத்தியஞ் செய்திருக்கிறேன்; ஷெ சம்பவம் நடக்கையில், நான் வீட்டிலேயே இருந்தேன்; எனது வீடு விசுவாசம் வீட்டிற்குப் பக்கத்தி லுள்ளது. நான் வீட்டில் தனியே தானிருந்தேன். கலகக்காரரைவிட வேறெவரும் அங்கு என்னிடம் வரவில்லை; அப்போது காலை 10, அல்லது 11 மணியிருக்கும். நான் அப்போது நித்திரையாயிருந்தேன்; கலகக்காரர் என்னை அடித்தனர்; உடனே நான் எழும்பி 50, 60 பேரைப்பார்த்தேன். அவர்கள் என்னிடமிருந்த பணம், ஆபரணங்கள் என்பனவற்றைப் பறித்துக் கொண்டுபோய்விட்டனர். அவர்கள் இன்று இன்னாரென்று கண்டுபிடிக்க என்னால் முடியும். அருணாசலம் கந்தையா, பொன்னர் கந்தையா, கந்தையா கதிரவேலு, சின்னத்தம்பி வேலாயுதர், சின்னத்தம்பி கதிரவேலு, கறுவல்தம்பி, சின்னப்பொடிச்சி கந்தையா, நாகநாதர் சின்னத்தம்பி, நாகநாதர் கணபதிப்பிள்ளை முதலியோர்தான் என்னை அடித்தவர்களென்று எனக்குத் தெரியும்; (மேற்படியாரைச் சாட்சி நீதிபதிக்கு காட்டினான்) என்னை அடித்தபின் இவர்கள் சென்றனர். கண்ணிமையில் எனக்குக் கத்திவெட்டு விழுந்தது. நான் அறிவு மயங்கிக் கிடந்தேன். பொழுதுபட்டு 6 மணிக்குப் பின்தான் எனக்கு அறிவு வர, தேவாலயத்துக்குச் சென்றேன். அடுத்த நான் ஆஸ்பத்திரிக்குப் போனேன். நான் தேவாலயத்திற்குச் சென்றபின் வைத்தி சவரியைக்கண்டேன் அவனுடைய தேகத்தில் நெருப்புக்காயங்களைக் கண்டேன். அவன் இறந்துபோனான்; இப்போது நான் காட்டியவர்கள் எமது அயலிலுள்ள வேளாளராவர்; அவர்களுக்கு நான் வைத்தியஞ்செய்திருக்கிறேன்"

குறுக்கு விசாரணையிற் சாட்சி சொல்லியன.

"அன்று காலை 9 மணிக்கு, துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி நான் கேள்விப்படவில்லை. துப்பாக்கியால் யாரோ சுடப்பட்டார் என்று ஜனங்கள் பேசிக்கொண்டனர் என்பது பொய். அன்று பொழுதுபட்டு 6 மணியளவில் தான் அதைப்பற்றி நான் கேள்விப்பட்டேன்.

"காலை 9 மணிக்குத் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். நான் என் வாக்குமூலங் கொடுக்கவில்லை; முதலுன், சனிக்கிழமை பின்னேரம் ஓர் சண்டை நடைபெற்றதென்றும், சபஸ்தியானுக்கும், தம்பையாவுக்குமிடையே, ஏதோ செருப்பு அணிந்துபோன விஷயத்தினால்தான் சண்டை ஏற்பட்டதென்றும் அறிந்தேன்."

மிஸ்ரர் எலியன் பெரீரா:—தங்களில் ஒருவரை உங்கள் ஊரியார் துப்பாக்கியினாற் சுட்டுக் கொன்றுவிட்டனர் என்று கேள்விப்பட்ட பின்னரே, உங்களை அடிக்கத் தாம் புறப்பட்டதாக, எதிரிகளாகிய வேளாளர் கூறுகின்றனர். முன்னர் நீ கூறியிருக்கின்றாய், துப்பாக்கி விஷயத்தைப்பற்றிக் காலை 9 மணிக்குக் கேள்விப்பட்டதாக; இப்போது சொல்லுகிறாய், உங்களை வேளாளர் அடித்தபின் தான் அது விஷயத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதாக; வேளாளர் அடித்தபின்றான் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது என்று நிரூபிப்பதற்காகவே இப்போது நீ முன் சொன்ன சாட்சியத்தைப் பொய்யாக்கப் பார்க்கின்றாய்."

தோனை என்பவளின் சாட்சியம்.

"நான் காபிரியேலின் மகள்; புங்குடுதீவில் எனக்கு ஒரு கடையுண்டு. சனிக்கிழமையிரவு நான் தேவாலயத்தில் இருந்தேன்; என்னுடைய மகன் சபஸ்தியானும் தேவாலயத்தில் இருந்தான். ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, நாம் இருவரும் கடைக்குச்சென்று பார்த்தபோது, அதன் கிழக்குப்பக்கத்துத் தட்டிகள் அறுத்து எறியப்பட்டும் உள்ளிருந்த பொருள்கள் களவாடப்பட்டும் காணப்பட்டன. நான் எனது மகனை உடையார் வீட்டிற்கு அனுப்பினேன்; உடையார் வீட்டில் இருந்து எனது மகன் வரத் தாமதித்தது. தேவாலயத்துக்கு வந்திருப்பானென எண்ணி அங்கே சென்றேன். பூசை முடிந்தபின் எனது கடைக்குத் திரும்பினேன். இதன்பின், ஏதோ கலகம் நடக்கின்றதென்பதை அறிந்து, நான் என் கடைக்குள்ளேயே இருந்துவிட்டேன்; இதற்கிடையில், எதிரிகள் கடைக்குட் புகுந்து என்னை அடித்தனர். என்னை மயிரிற்பிடித்து மார்பில் உதைத்தார்கள்; முதல்மூனுபேர்தான்வந்தனர்; மற்றவர்கள் அதற்குபின்வந்தனர். என்னை அடித்தபின், என்னிடம் இருந்த நகைகளையும், மடியில் இருந்த 55 ரூபாவையும் பிடுங்கிக்கொண்டு அவர்கள் சென்றனர். என்னை அடிப்பதைப் பொலிஸ்விதானை கண்டார். அன்று பின்னேரம் உடையார் அந்தவழியாற் சென்றபோது என்னை அடித்ததையும் என் பொருள்களைப் பிடுங்கியதையும் அவருக்கு முறையிட்டேன்."

குறுக்கு விசாரணையிற் சாட்சி கூறியன.

"எனக்கு அடித்தபின்னர்தான் துப்பாக்கிச் சத்தத்தை நான் கேட்டேன். துப்பாக்கிச் சத்தம் கேட்டபின்தான் எனக்கு அடித்தார்கள் என்று ஆஸ்பத்திரியில் சொல்லவில்லை."

இத்துடன் வழக்குவிசாரணை இன்றைக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

விளம்பரம்.

அனலைதீவு சதாசிவ வித்தியாசாலை
வித்தியாசங்க வருடாந்தக் கூட்டம்.

இக்கூட்டம் இம்மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை 10 மணியளவில் இலங்கைத்தமிழ் வித்தியாபகுதி மேற்பார்வைகாரராயிருந்து இளைப்பாறிவரும். ஸ்ரீமான். S. கந்தையாபிள்ளை அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும்.

அனலைதீவு. வே. ஐயம்பிள்ளை
10-12-33. காரியதரிசி.
(Mis 165- 11-12-33)

யாழ்ப்பாணம் பெரியகடை பொருள் விலைகள்.

			ரூ.	ச.
1.	வார் செல்லு	புசல்		
2.	சின்னரிக்கன் செல்	(மூடை)	5	00
3.	கறுப்பு	,, ...	5	25
4	கடுகு சின்னு	,, ...	5	25
5.	மூத்துச்சம்பா அரிசி	புசல்	4	00
		௨ந் திறம்	5	00
6.	சல்லுண்டை	,, ,,	(இல்லை)	
7.	ரோஸ்	,, ,,	3	75
8.	முழுப்பச்சை	,, ,,	—	
9.	குறுநல் பச்சை	,, ,,	2	50
10.	குத்தரிசி	,,	3	50
11.	வார் அரிசி	,,	—	
12.	மிளகாய்	இரு		28
13.	மல்லி	,,		12
14.	மிளகு	,,		40
15	சீரகம்	,,		40
16.	கடுகு	,,		20
17.	வெந்தயம்	,,		12
18.	உள்ளி	,,		24
19.	சோம்பு(பெருஞ்சீரகம்)	,,		20
20.	மஞ்சள்	,,		20
21.	சுக்கு	,,		32
22.	உழுந்து	படி		15
23.	பயறு	,,		14
24.	கடலை	,,		16
25.	பருப்பு (துவரை)	,,		22
26.	,, (கடலை)	,,		18
27.	,, (உழுந்து)	,,		20
28.	கோதுமை மா	இரு		09
29.	,, ரவை	,,		10
30.	வாலியரிசி	1 இரு (டின்)		40
31.	சௌவரிசி	,,		10
32.	சர்க்கரை (வேலூர்)	,,		12
33.	,, (ஜாவா)	,,		10
34.	சீனி (கிறேப்)	,,		12
35.	,, (மா)	,,		14
36.	கற்கண்டு	,,		16
37.	கோப்பி 1-வது	,,		40
	,, 2-வது	,,		36
38.	தேயிலை I-வது	,,		65
	,, 2-வது	,,		50
39.	சிகைக்காய்	,,		14
40.	கர்ப்பூரம் (வில்லை)	,,	1	60
	,, (பாக்கெற்)	,,		05
41-	நெருப்புப்பெட்டி (3 கட்சிறம்)	டசின் ,,		32
42.	நெய் (தசா)	இரு		90
43.	தேங்காய் நெய்	படி		20
44.	எண்ணெய்	,,		52
45.	கரோசின் தைலம் (மண்ணெண்ணெய்)	போத்தல்		19
	,,	கலன்	I	08
46.	தேங்காய்	100	4	00
47.	வெங்காயம்	இரு		04
48.	பம்பாய் வெங்காயம்	,,		08
49.	உருளைக் கிழங்கு	,,		08
50.	கருணைக் கிழங்கு	,,		05
51.	புளி	,,		10
52.	உப்பு	,,		4
	,,	படி		10
53.	விறகு	தூக்கு	1	10
54.	முழுப்பவுண்		20	50
55.	அரைப்பவுண்		10	45
56.	வெள்ளி	ரூபா எடை		50

கொழும்பு விவேகானந்த சபை.

அகில இலங்கைச்
சைவசமய பாடப் பரீட்சை

இப் பரீட்சை நிகழும் ஸ்ரீமுக வருஷம் மார்கழிமாசம் ௧௬௳ (30-12-33) சனிக்கிழமை காலை 9மணிதொடக்கமாக, சபையாருக்கு முன்னரே விண்ணப்பப்பத்திரமனுப்பிய வித்தியாசாலைகளில் நடத்தப்பெறும்.

நேரசூசி இன்னும் கிடைக்கப்பெறாத தலைமையாசிரியர்கள சபையின் சமயவிஷயக் காரியதரிசிக்குத் தெரிவிக்கக்கடவரென ஷெ காரியதரிசி எமக்குத் தெரிவிக்கின்றனர்.

அகிலஇந்திய காங்கிரஸ்மகாசபை

இச்சபை ஒருபோது விரைவில் கூட்டப்படுமென எண்ணவேண்டியிருக்கிறது. ஜபல்ப்பூரில் மகாத்மாவும் மற்றைய தலைவர்களும் என்ன முடிவு செய்கின்றாரோவென்பது அறியக்கிடக்கின்றது. இச்சபையைக்கூட்ட அரசினர் இடங்கொடாரெனவும் சில பேச்சுகள் கிளப்பப்படுகின்றன. ஆனால், அப்படிச் சொல்லுவது உண்மையல்லவென்பது பலர் கருத்து. சட்டமறுப்பினை நிற்பாட்டவேண்டுமெனச் சில பிரபல காங்கிரஸ்வாதிகள் வாதிப்பதனால் அக்கட்சியே வெற்றிபெறுமென அரசினர் எண்ணுகின்றனர். ஆனால், இச்சமயத்தில் காங்கிரஸ்கட்சியினர் சட்டமறுப்பினை மறுபடி உயிர்கொடுத்து வலுவடையச்செய்ய முயலினும் அரசினர்வாளாவிராரென்பதும் உண்மைதான். இச்சபை சட்டவிரோதமாயின் இதற்குச் சமூகமளிக்கச் செல்வோரும் ஒருபோது கைதியாகலாம். அப்போது பெருங்கஷ்டங்கள் ஏற்படும். ஈ—கி,

அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டக்கோவைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் பெ. அ. சி. மு. அரு. அருணசலம் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1932-ம் ஆ செப்டெம்பர்

இல.	திக.	ரூ.	ஊரும் பெயரும். நகைகளின் விபரம்.
20929	1	40	ஆரியர் குளம் பொன்னம்பலம் கந்தையா சங்கிலி ஒன்றுக்கு
20930	1	30	ஆரியர் குளம் பொன்னம்பலம் கந்தையா அச்சுக்காப்புச்சோடி ஒன்றுக்கு
20932	1	8	பெரியகடை ரெத்தினம் தில்லையம்பலம் கல்மோதிரம் ஒன்றுக்கு
20934	1	14	கன்னாதிட்டி அக்கமுத்துப் பத்தர் சஞ்சீவி ஆசாரி சீலக்கல் மோதிரம் 1
20983	3	13	கன்னியங்காடு கனகசபை வைத்தியநாதர் அஷ்டாக்கூடு ஒன்றுக்கு
21003	4	70	வண்கிழக்கு வல்லிபுரம் தியாகராசா செட்டிக்கொலிசு சோடி ஒன்றுக்கு
21020	5	22	ஆஸ்பத்திரியடி கனகசபாபதி சுப்பிரமணியம் கல் புறோச் 1, ஜெடி கல் மோதிரம் 1, புலிநக புறோச் ஒன்றுக்கு
21025	5	9	வண்கிழக்கு வல்லிபுரம் தியாகராசா கல் இனாவர் மோதிரம் ஒன்றுக்கு
21082	6	45	சுதுமலை சின்னப்பு கந்தசாமி கம்பிப்பூரானட்டியல் ஒன்றுக்கு
2.084	6	102	கொடிகாமம் ரெங்கய்யாசெட்டியார் ருகலய்யாசெட்டியார் சிறுசு பெருசு பட்டணக்காப்பு நாலுக்கு
21086	6	100	சாவகச்சேரி கதிரவேலு தம்பிப்பிள்ளை முருக்குக்காப்பு 2, முழுப்பவுண் 1 கோர்த்த குண்டுச்சங்கிலி ஒன்றுக்கு
21224	11	825	ஆரியர்குளம் பொன்னம்பலம் கந்தையா வயிரம் 11, சிகப்பு 70, பச்சை 2 கட்டிய பதக்கத்துடன் அட்டியல் ஒன்றுக்குக்கு
21229	12	21	வெள்ளாந்தெரு கருணரெத்தினம் ரெயினுசாமி சங்கிலி ஒன்றுக்கு
21866	16	8	தெல்லிப்பழை பொன்னுச்சாமி ராசரெத்தினம் கல்தோடு சோடி ஒன்று
21448	19	17	கொக்குவில் கிழக்கு வேலுப்பிள்ளை சின்னத்தம்பி கல் கவுத்தோர் 1 அரைப்பவுண் ஒன்றுக்கு
21569	23	105	கொடிகாமம் தியாகபிள்ளை முத்துசாமி பிள்ளை சிறுசு பெருசு பட்டணக்காப்பு நாலுக்கு
21597	24	90	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியார் ருகலய்யாசெட்டியார் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் ஒன்று சிறு பட்டணக்காப்பு இரண்டுக்கு
21598	24	70	கொடிகாமம் ரெகய்யா செட்டியார் ருகலய்யா செட்யார் பட்டணம் காப்பு 2, சிமிக்கிவாளி சோடி ஒன்றுக்கு
21651	26	32	ஆரியர்குளம் பொன்னம்பலம் கந்தையா அச்சுக்காப்பு சோடி ஒன்றுக்கு
21652	26	30	ஆரியர்குளம் பொன்னம்பலம் கந்தையா சங்கிலி ஒன்றுக்கு
21715	29	10	சங்கானை அம்பலவாணர் இராசதுரை கவுத்தோர் ஒன்றுக்கு
21743	30	6	உடுவில் வீரகத்தி ஆறுமுகம் சிமிக்கி வாழி சோடி ஒன்றுக்கு
அக்டோபர்			
21809	8	15	கொக்குவில் கிழக்கு சிவகுரு தம்பிப்பிள்ளை கவுத்தோர் ஒன்றுக்கு
21822	8	13	வண்மேற்கு கந்தர் முருகேசு சிகில் மோதிரம் ஒன்றுக்கு
22037	11	22	வண்மேற்கு நல்லதம்பி செல்லையா குண்டுச்சங்கிலி ஒன்றுக்கு
22188	15	55	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியார் ருகலய்யா செட்டியார் பட்டணம் காப்பு 2, கல்தோடு 2 விலாசம் போட்ட சிகில்மோதிரம் ஒன்றுக்கு
22167	16	62	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியார் ருகலய்யா செய்யார் பட்டணம் காப்பு 2, கைச்சங்கிலி ஒன்றுக்கு
22216	18	70	கொடிகாமம் பெருமாள்நாயுடு ராமசாமி நாயுடு பட்டணம்காப்பு 2, வெள்ளைக்கல் மோதிரம் ஒன்று காதோலை இரண்டுக்கும்
22266	19	110	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியர் ருகலய்யா செட்டியார் பட்டணம் காப்பு 4, சீலக்கல் மோதிரம் 1, சொருசா கல்மோதிரம் ஒன்றுக்கு
22269	19	11	சங்கானை நாகமுத்து குமாரசாமி கல் அஷ்டாக்கூடு 1, கல்தோடு இரண்டு
22274	20	6	கொக்குவில் கிழக்கு நாகமுத்து துரையப்பா சிமிக்கிவாழி சோடி ஒன்று
22314	21	7	கோப்பாய் சிதம்பரப்பிள்ளை நடராசா குண்டு இல்லாத அரைப்பவுண் 1
22315	21	75	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியார் ருகலய்யா செட்டியார் பட்டணம் காப்பு 2, செப்புக்கட்டைவைத்த பின்னைக்காப்பு இரண்டுக்கு
22317	21	57	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியார் ருகலய்யா செட்டியார் பட்டணம் காப்பு 2, செப்புக்கட்டை வைத்த காப்புச்சோடி ஒன்றுக்கு
22331	22	100	ஆஸ்பத்திரியடி கனகசபாபதி சுப்பிரமணியம் பன்னிரண்டு வயிரச் சன்னம் கட்டிய தோடுசோடி ஒன்றுக்கு
22338	22	30	ஆஸ்பத்திரியடி கனகசபாதி சுப்பிரமணியம் குண்டுச்சங்கிலி ஒன்றுக்கு
22353	23	120	கொடிகாமம் பெருமாள் நாயுடு இராமசாமி நாயுடு பட்டணம் காப்பு 4, வெள்ளைக்கல் மோதிரம் 1, செப்புக்கட்டைவைத்த காப்பு சோடி ஒன்று
22355	23	100	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியார் ருகலய்யா செட்டியார் பட்ணம் காப்பு இரண்டு, பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் ஒன்றுக்கு
22356	23	55	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியார் ருகலய்யா செட்டியார் பட்டணம் காப்பு இரண்டு காதோலை சோடி ஒன்றுக்கு
22368	23	60	கொடிகாமம் ரெங்கய்யா செட்டியார் ருகலய்யா செட்டியார் பட்டணம் காப்பு இரண்டு வெள்ளைக்கல் தோடு சோடி ஒன்றுக்கு
22427	25	55	உடுவில் விசுவர் கந்தையா செட்டிக்கொலிசு சோடி ஒன்றுக்கு
22483	27	60	ஆரியர் குளம் பொன்னம்பலம் கந்தையா கழுத்துச்சங்கி ஒன்று கல் காப்பு முகப்பு இரண்டுக்கு
22484	27	35	ஆரியர் குளம் பொன்னம்பலம் கந்தையா அச்சுக்காப்பு சோடி ஒன்றுக்கு
22485	27	55	ஆரியர் குளம் பொன்னம்பலம் கந்தையா பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் ஒன்றுக்கு
22571	28	6	அளவெட்டி வீரகத்தி செல்லையா வெள்ளியில் பொன் போட்ட கொண்டைப்பூ ஒன்றுக்கு
22603	29	20	வண்மேற்கு சின்னத்தம்பி நாகலிங்கம் சிகப்புக்கல் பதக்கம் ஒன்றுக்கு

விற்பனவு:— ஸ்ரீமுகஹு மார்கழிமீ கூ-ம் தேதிக்குச் சரியான (23—12—33) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்ட நகை புறநீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
கெந்தீஸ்மேஸ்தர்.

(Mis. 161, 7—11-12-33.)

ஒன்றைப் பார்த்துச் செய்யப்பட்டதிலும்

முதலாகச் செய்யப்பட்ட பொருளே எவ்வாற்றானும் சிறந்தது.

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

தைலம்.

1885-ப் ஆண்டு முதன்முதலாகச் செய்யப்பட்டது.

1933-ம் ஆண்டிலும் இதுவே முதன்மைபெற்றுள்ளது.

இந்தியாவில் இந்தியர்களாலேயே செய்யப்பட்டது.

இத்தைலத்தையே எல்லாவிதமான

நோவுகளுக்கும் வலிப்புகளுக்கும் உபயோகியுங்கள்.

(Y. 18. 11-2-33—11-2-34.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டக்கோவைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-கிழக்கு மு. ரும. மு. சேவுகஞ் செட்டியார் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:—

1932-ம் ஆ ஜூலைமீ

நம்.	திக.	ரூ.	ஊர். பெயர். நகைகளின் விபரம்.
16747	4	6	கொண்டாவில் பா. சங்கரன் இமி. கடுக்கன் சோடி 1 அரும்புத்தடை 1
16896	9	6	சுன்னாகம் ம. சின்னத்தம்பி மணுக்கன் கல்தோடு சோடி ஒன்று
16938	11	8	சுளிபுரம் சி. கைலாயபிள்ளை ஆடுதன் மோதிரம் ஒன்று
16956	11	15	மண்டதீவு க. வேலுப்பிள்ளை காட்டுக்கடுக்கன் சோடிஒன்று
16981	12	115	சோனகதெரு மூ. க. முகம்மது அப்துல்காதர் சவடிச்சங்கிலிக் கொடி ஒன்று இமி. நீலக்கல் மோதிரம் ஒன்று
17019	14	40	சீரணியடி மு. கந்தையா இமி பதக்கத்துடன் முறிச்சுக்குத்தி அட்டியல் ஒன்று
17123	18	60	சோனகதெரு சே. சுல்தான் அப்துல்காதர் சவடிக்கொடி ஒன்று
17124	18	40	சோனகதெரு ப. சாகுல் கமீது முறிந்த சவடிக்கொடி ஒன்று
17247	24	70	வெள்ளாந்தெரு கா. செல்லத்துரை அச்சாக்கூடு 1, இமி. மோதிரம் 3 புறோச்சு 1, குண்டுவைத்த அரைப்பவுண் கா. இரண்டு, காய் இரண்டு
17270	25	11	ஆனைக்கோட்டை சி பொன்னுத்துரை இமி கல் மோதிரம் ஒன்று
17315	27	70	வண்கிழக்கு மு. தாமோதரம்பிள்ளை இமி டிப்பியுடன் சங்கிலி அட்டியல் 1
17325	27	12	கோப்பாய் ச. சதாசிவம் இமி கவுத்தோர் ஒன்று
17337	28	20	நல்லூர் க. ராசையா சங்கிலி ஒன்று
ஆகஸ்டுமீ			
17638	8	12	புத்தூர் வி. கைலாயர் கொண்டைப்பூ ஒன்று
17761	13	30	அய்யனார் கோவிலடி அ. விசயரெத்தினம் வெள்ளைக்கல் மோதிரம் ஒன்று

விற்பனவு:—ஸ்ரீமுகஹு மார்கழிமீ அ-ம் தேதிக்குச் சரியான (22-12-33) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை புறநீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
கெந்தீஸ் மேஸ்தர்.

(Mis. 163. 7&11-12-33.)

குடைமார்க் ஓடுகள்.

உற்பத்தியாக்குவோர்:

ஐரோப்பிய மதுரைக் கம்பேனியார்.

இலேசானது; பெலனானது; மலிவானது.

அடைமழைக்குக் கசியாது; உஷ்ணம் வீசாது.

10 தங்கமேடல்கள் பரிசாகப்பெற்றன.

குடைமார்க் ஓடுகளே குவலயமெங்கும்

அபிமானிக்கப்படுவன.

☞ காங்கேசன்துறை அரசினர் சுகஸ்தானத்திற்கு

55000 குடைமார்க் ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

118 ஓடுகள் 100 சதுர அடிவிஸ்தாரத்தை மூடப்போதுமானவை.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளும், தளவரிசைக் கற்களும், அழுத்தமானபைப்புக்களுமுண்டு.

துறைமுகத்துக்கு அருகாமையில் கடற்கரைத்தெருவில்

புதிதாய்த் திறந்திருக்கும் ஸ்ரோறிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. செருபீம் & பிறதர்,

ஏஜெண்ட்: பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்ன்மெண்ட், முனிசிப்பல்

கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள தங்கமேடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:–64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை:-316–ம் நி-ர். கிட்டங்கித்
தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்ருய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.

Y. 2. 31-3-34.)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press the Saiva Prakasa Press. Vannarponnai, Jaffna